Registered No. M. 5068.

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரிஹு அற்பசிமீ 2உ 18—10—1948 ஹிஜ்ரி 1367 ஜில்ஹிஜ்ஜாமீ 14உ திங்கட்கிழமை. } இதழ் 37

## — முஸல்மான்களின் தவருன போக்கு. —

—( மௌலாஞ ஹுசைன் அஹ்மத்மதனி அறிவுரை. )—

○ ○ ○

கலவரங்களால் முஸ்லிம்களுக்கு பெருவாரியான உயிர்ச்சேதம், ஏராளமான பொருட்சேதமும் ஏற்பட்டிருக்கிறது. வாழ்க்கை வசதிகள் இழந்து, கட்டுக்கோப்பு சிதறுண்டு, மஞேதிடம், உறுதி, நம்பிக்கை, தைரியம், சகிப்புத்தன்மை, முதலிய சிறந்த குணங்களேயும் பரிகொடுத்துவிட்டனர், என்பது உண்மை.

ஆயினும் இந்த அழிவு எதிர்பாராமல் விதி வசத்தால் சம்பாதித்ததா? அழிவை தவிர்க்க முடியாத நிலேமையில் முஸ்லிம்கள் செயலற்றுப்போய் இருந்தார்களா? அல்லது அவர்களுடைய தவருன முயற்சிகளின் தவிர்க்க முடியாத இயற்கை விளேவுகளா? அவர்களின் கடந்த கால போக்கின் விளேவுகள் நாசத்தையும் அழிவையும் தவிர வேறு எதுவாக இருக்க முடியும்?

முஸ்லிம்கள் கடவுளே மறந்தன. அவருடைய ஏவல், விலக்கல்களே அலட்சியம் செய்தனர். தான்தோன்றிகளாய் இஸ்லாத்தின் உயரிய போதனேகளே புரக்கணித்தனர். இஸ்லாமிய கலாச்சாரத்தை தாங்கி நின்ற உண்மை முஸ்லிம்களுக்கு இழிவு செய்தனர். கேவலப்படுத்தினர் சுயநலத்தின் அடிமைகளாய் ஆசையை வணங்கினர். ஆண்டவனின் முதல்தர எதிரிகளேப் பின்பற்றி நபியவர்களின் பரம சத்ருக்களே நம்பினர்.

நாம் அனுஷ்டிக்காத தவருன போக்கும் உண்டா? அழிவு, நாச வழிகளில் நாம் நடக்காமல் விட்ட ஒருவழியேனும் பாக்கி உண்டா? நம்முடைய செய்கைகளே சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

நம் தலேவர்கள் கலகப்பிரியர்களாகவும், நாம் அலட்சியமாகவும் இருக்கவில்லேயா? நம்மில் நேர்மையான வழியை நாடியவர்கள் எத்தனேபேர்? சத்திய சங்கநாதத்துக்கு செவிசாய்க்க தயாராய் இருந்தவர்கள் எத்தனேபேர்? உண்மை முஸ்லிம்கள் என்று சொல்லிக்கொள்ள உரிமை பெற்றிருந்தவர்கள் எத்தனே பேர்? அப்படியாளுல் அழிவும், நாசமும் நாமே நம் கைகளால் தேடிக்கொண்டதன்றி வேறு யாரால் ஏற்பட்டிருக்க முடியாது?

### இயற்கை நியதி.

இம்மாதிரி செய்கைகள், நடவடிக்கைகளுக்குப் பிறகும் கடவுள் நமக்கு கவுரவம், உயர் அந்தஸ்து, அளித்து நாட்டின் வாரிசுகளாக்கி தலே நிமிர்ந்து நிற்க சந்தர்ப்பம் கொடுப்பார் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? இயற்கை நமக்காக என்று தன் விதியை மாற்றிக்கொள்ள முடியாது. திரு குர் ஆன் நம்மை எச்சரித்தே இருந்தது —

"இது அவர்களுடைய கைகளே செய்த செய்கைகளால் ஏற்பட்டதேயாகும். ஆண்டவன் தன்னுடைய பக்தர்கள் மீது அநியாயம் செய்பவனல்ல. எதுவரையில் அவர்களே தங்கள் செய்கைகளே மாற்றிக்கொள்வதில்லேயோ ஒரு ஜாதியாருக்கு அளித்த செல்வங்களே ஆண்டவன் மாற்றக் கூடியவனல்ல"

### மேலும் குர் ஆன் கூறுவதாவது :—

"நாம் ஒரு ஜனக் கூட்டத்தை அழிக்க எண்ணிளுல் அதிலுள்ள சுகவாசிகளே அமர்த்துகிருேம். பிறகு அவர்கள் ஜனங்களிடையே கலகங்களே தூண்டி விடுகின்றனர். நம்முடைய சங்கல்பம் பூர்ணமடைந்து சரியான முறையில் அந்த ஜனக் கூட்டத்தை நாம் நாசம் செய்கிருேம்."

## திரு முஹம்மது நபி அவர்கள் எச்சரித்திருப்பதாவது :—

"உங்களிடையே ஒழுக்கம் மிகுந்தவர்கள் தலைவர்களாகவும், செல்வந்தர்கள் தர்ம சிந்தனையுள்ளவர்களாகவும், இருப்பதுடன் உங்கள் பிரச்னைகள் பரஸ்பர ஆலோசனையின் மீதும் தீர்க்கப்பட்டால் பூமியின் வயிற்றைவிட அதன் மேல் பரப்பு உங்களுக்கு நன்மை அளிக்க முடியும். என்று உங்கள் தலைவர்கள் உங்களை விட மட்டமானவர்களாகவும், செல்வவந்தர்கள் லோபிகளாகவும், உங்கள் பிரச்னைகளை தீர்ப்பவர்கள் பெண்களாகவும் இருப்பார்களோ அன்று பூமியின் மேல் பரப்பைவிட அதன் வயிறு உங்களுக்கு உகந்ததாக இருக்கும்."

குர் ஆனும் நபியவர்களும் விடுத்த எச்சரிக்கைகள் நம்மை விழிப்படையச் செய்தனவா? கலவரங்களைத் தூண்டிய நம் தலைவர்களைத் தடுத்து நிறுத்தினோமா? அல்லது முஸ்லிம் பொதுமக்களை ஒழுக்கக் கேடான காரியங்கள் செய்யாமலிருக்க உபதேசித்தோமா? இல்லை.

## சரித்திரத்துடன் அலட்சியம்

இஸ்லாமிய சரித்திரவடுகள் உங்கள்முன்னால் விரிந்து கிடந்தன. இஸ்லாமை அழிக்க அப்துல்லா பின் ஸபா செய்த சூழ்ச்சிகள், ஷீயாக்களால் ஹஜ்ரத் அலி ஹஜ்ரத் ஹுஸைன் அனுபவித்த துன்பங்களும், கொலையும் தௌஸீ, இப்னு அல்கமா செய்த பித்தலாட்டங்களால் அப்பாஸியா கிலாபத்தின் வீழ்ச்சி, ஸையத் சகோதரர்களால் முகல் சாம்ராஜ்யத்தின் அழிவு, மீர்ஜாபர், மீர்சாதிக் செய்த துரோகத்தால் சிராஜுத் தௌலா, திப்பு ஸுல்தான் இருவரின் தோல்வி முதலிய இஸ்லாமிய சரித்திரப் பூர்வமான ரத்தக் கண்ணீர் வடிக்கத்தக்க சம்பவங்கள் நமக்கு விழிப்படையச் செய்யவும், படிப்பினை கற்றுக்கொடுக்கவும் போதுமானவையாக இருந்தன. ஆயினும் நீங்கள் விழிக்கவில்லை.

திரு குர் ஆனும், நபியவர்களின் திருவாசகங்களும் வழி காட்டின. கண்களை இறுக மூடிக் கொண்டீர்கள் தவறான போக்கினால் சமூகங்கள் இதற்கு முன் அடைந்த துர்கதி பயமுறுத்திக் கொண்டிருந்தது. காதுகளைப் பொத்திக் கொண்டீர்கள். இஸ்லாமிய சரித்திரத்தில் படிப்பினைக்குரிய சம்பவங்கள் அறிவுறுத்தின. விழிப்படையவில்லை ஜமீயத்துல் உலமாயே ஹிந்த் அடிக்கடி எச்சரித்து வந்தது மத, கலாச்சார கடமைகளை நினைவூட்டியதுடன் எதிர்கால அபாயங்களில் உங்கள் கவனத்தைத் திருப்ப தீவிரமாக முயற்சித்தும் வந்தது. உங்கள் காதுகளில் ஒன்றுமே ஏறவில்லை.

ஜமீயத்துல் உலமா அன்றே எச்சரிக்காமல்விட்ட ஒன்றும் இன்று புதிதாக நடந்துவிடவில்லை. உங்கள் நன்மையே நாடிய தன்னலமற்ற அந்த உண்மை ஊழியர்களுக்கு கிடைத்த பலன் என்ன? அவர்களுடன் நீங்கள் நடந்துகொண்ட விதத்தை நான் வர்ணிக்க விரும்பவில்லை. உங்கள் அறிவு, பேச்சுத் திறன், பேனாமுனை, கைபலம் எந்த அளவுக்கு ஒத்துழைக்க முடிந்ததோ, அந்த அளவுக்கு அவர்களை வெறுப்பதில் நீங்கள் உபயோகித்தீர்கள்

இவ்வளவையும் அவர்கள் சகித்தார்கள். ஆனால் கடமையைச் செய்யாமல் இருக்கவில்லை. ஊர் ஊராகச் சென்று, பத்து கோடி இந்திய முஸல்மான்களை ஸ்பெயினில் முஸ்லிம்கள் அடைந்த துர்கதிக்கு அழைத்துச் செல்லும் தலைமையின் மோசடியை எடுத்துச்சொல்லி தங்கள் கடமையை நிறைவேற்றியே வந்தனர்.

## அசிரத்தையின் விளைவுகள்

ஜமீயத்துல் உலமாவை விட்டு நீங்கள் நம்பிய உங்கள் தலைவர்கள் எப்பேர்ப்பட்ட நெருக்கடியில் உங்களைவிட்டுச் சென்றுவிட்டனர் என்பதை கண்களை திறந்துகொண்டு பார்த்தால் தெரியும். இன்றைய நிலைமையைக் குறித்து நபியவர்களும், குர் ஆனும் அன்றே எச்சரித்திருக்கவில்லையா?

## திருநபியவர்கள் கூறியதென்ன:—

"சாப்பிட வரும்படி ஒருவரையொருவர் அழைப்பதைப்போல் உங்களை எதிர்க்க இதர சமூகங்கள் ஒன்றையொன்று அழைக்கப்போகும் நாள் சீக்கிரமே வந்துகொண்டிருக்கிறது" ஒருவர் "நம்முடைய எண்ணிக்கைக்குறைவினால் அன்று அவ்விதம் நடக்குமா" என்று கேட்டார். "இல்லை. அன்று நீங்கள் பெரிய அளவில் இருப்பீர்கள். ஆனால் குப்பை கூளமாக. வெள்ளத்தில் மிதந்துவரும் குப்பை கூளத்தைப் போல் உங்கள் எதிரிகளின் மனதிலிருந்து கடவுள் பயத்தை போக்கிவிடுவார். உங்கள் மனதில் பலஹீனத்தை உண்டாக்கிவிடுவார்." என்று பதிலளித்தார். "பலஹீனம என்ன?" என்றார் கேட்டவர். "உலக ஆசையும் மரண பயமும்" என்று பதில் கிடைத்தது.

இன்று நமக்கு ஏற்பட்டிருக்கும் அழிவு இதற்கு முன் பல சமூகங்கள் தங்கள் செய்கைகள், நடவடிக்கைகளுக்காக அனுபவித்த அதே அழிவல்லவா? பதிமூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பே திரு குர் ஆன் அடியில் வருமாறு நமக்கு எச்சரிக்கை விடுக்கவில்லையா?

"கேவலம், இழிவு அவர்களை ஆக்ரமித்துக் கொண்டுவிட்டது கடவுளின் கோபத்திற்கு அவர்கள் இலக்கானார்கள்."

## மேலும் குர் ஆன் கூறுவதென்ன:—

"அந்த ஜனங்கள் எத்தனையோ சோலைகள், ஊற்றுக்கள், வயல்கள், பிரம்மாண்டமான வீடுகள், சுகம் தரும் உபகரணங்கள் அனைத்தையும் விட்டுச் சென்றார்கள். அதில் அமைதியாக அவர்கள் வாழ்ந்து வந்தனர். வேறு ஒரு சமூகத்தை நாம் அதற்கு வாரிசாக்கினோம். அச்சமயம் அவர்கள் மீது வானுலகமும் அழவில்லை, பூவுலகமும் கண்ணீர் வடிக்கவில்லை. அவர்களுக்கு அவகாசமும் அளிக்கப்படவில்லை."

இன்று இந்திய முஸ்லிம்கள் அடைந்துள்ள அதிர்ச்சி; அப்பாஸியாகிலாபத், முகலாய சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்றபோது இஸ்லாமுக்கும் முஸ்லிம்களுக்கும் ஏற்பட்ட சரித்திர பூர்வமான அதிர்ச்சி போன்றதாக இல்லையா? கலவரங்களால் ஏற்பட்ட டில்லியின் நாசம் பாக்தாத் அழிவுக்கு மாறுபட்டதா? கிழக்குப் பாஞ்சாலத்தின் பல்லாயிரம் மசூதிகள், மத்ரஸாக்கள், வாசகசாலைகள், தர்காக்கள், தர்ம சொத்துக்களின் அலங்கோலம் பாக்தாதை அடுதத இஸ்லாமிய நாடுகளின் அலங்கோலத்தைவிட குறைத்து மதிப்பிட முடியுமா? அப்பாஸியா கிலாபத்தின் சேனைகளை ஜிஹாத்தின் புனிதப் பெயரால் சிதறடித்துவிட்ட தௌஸி, இப்னே அல்கமாவைப்போலவே இஸ்லாமிய ராஜ்யத்தின் புனிதப் பெயரால் பத்துகோடி இந்திய முஸல்மான்களின் ஐக்கிய சக்தியை லீக் தலைமை சிதறடித்துவிடவில்லையா?

தரித்திரம் பிடித்த காக்கைக்கு தலைமைப் பதவி கிடைத்துவிட்டால் நாசத்தைத் தவிர வேறு எந்த வழிமில் அழைத்துச் செல்லும்.

## பீதி அடைய வேண்டாம்

மதத்தின் உயரிய கருத்துக்களை புறக்கணித்துவிட்டு நீங்கள் பின்பற்றிய தலைவர்கள் கடந்த 10 வருஷங்களாக உங்களுக்கு பயங்கொள்ளித்தனத்தின் விஷத்தை ஊட்டி வந்திருக்கின்றனர். இன்று நீங்கள் பீதி அடைந்திருப்பதைப் பார்க்கவும் வெட்கமாயிருக்கிறது தலை தெறிக்க ஓடுகின்றீர்கள் எங்காகிலும் ஓடி தெய்வ தண்டனையிலிருந்து தப்பிவிட முடியுமா? அல்லது உங்களைத் தொடர்ந்து மரணம் அங்கு வாமல் இருந்துவிட முடியுமா? கடந்த கால செய்கைகளின் விளைவுகளுக்குப் பயந்து எங்கே ஓடுகின்றீர்கள்? இஸ்லாமும், கோழைத்தனமும் ஒன்று சேர முடியாது.

பயத்தைவிட்டு கடவுளுக்கு பயந்து நடவுங்கள். உண்மை முஸ்லிம்களாக இருந்து வாழுங்கள். இஸ்லாமின் உயரிய போதனைகளை அலட்சியம் செய்யாதீர்கள். செய்த தவறுகளுக்கு பச்சாதாபப்பட்டு திருந்துங்கள். நீங்களும் மனிதர்கள்தான். கடவுள் மிருகங்களின் முறையீட்டையும் கேட்கக் கூடியவர் என்பதை மறக்க வேண்டாம் எனவே உங்கள் துன்பங்கள் நீங்க ஒரே ஒரு வழி நீங்கள் தெய்வத்தின் பக்கம் திரும்புவதேயாகும்.

ஒரு சுயநலத் தலைவரின் பேச்சை நம்பி நீங்கள் உட்கொண்ட விஷயத்தின் தீங்குகளை இன்று பிரத்யட்சமாய் பார்க்கின்றீர்கள். சமூகத்தின் உடலில் பரவிவிட்ட அந்த கொடிய விஷத்தின் நாசகரமான தன்மையை காளாவட்டத்தில் போக்கி உங்கள் துன்பங்களை அகற்றுவதற்காகத்தான் நாங்கள் பாடுபடுகிறோம். இதுவரையில் உங்கள் கோபத்திற்கும் ஆத்திரத்திற்கும் இலக்காய் இருந்து வந்த உங்கள் பழைய ஊழியர்கள் இன்றைக்கும் உங்கள் எதிர்காலத்தை உருவாக்க பாடுபட்டு வருகின்றனர் நீங்களும் நம்முடன் சேர்ந்து ஒத்துழைத்து உதவி செய்தாலன்றி நாம் ஒன்றும் செய்ய முடியாது அரசியல், கலாசார நலன்கள் காக்கப்பட உகந்த வழியில் முயற்சிக்க வேண்டும்.

இதுவரை நீங்கள் அனுஷ்டித்த வகுப்புவாதப் போக்கு சென்ற காலத்திலும் உங்கள் அரசியல், கலாசார முன்னேற்றத்திற்கு தடை செய்திருக்கின்றது. எதிர்காலத்திலும் நீங்கள் கௌரவமாக அமைதியுடன் வாழ முடியாமல் செய்து விடும். இதர சமூகங்களுடன் சமுகமாய் பழகி இந்த நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைப்பதைத் தவிர இன்றைக்கும் நம்மிடம் வேறு திட்டமில்லை.

## உண்மை விசுவாசம்.

இந்த நாடு வளம்பெற நீங்களும் ரத்தம் சிந்தியிருக்கின்றீர்கள். இனியும் இந்த நாட்டிற்காக ரத்தம் சிந்துவோம் என்று சபதம் செய்யுங்கள். மற்றவர்களுக்கு இருக்கும் அதே உரிமை இந்த நாட்டிலிருக்கும் உங்களுக்கும் உண்டு அதைப்போலவே தேச சேவையிலும் உங்களுக்கு பொருப்பு அவசியம். விசுவாசத்தை தெரிவிக்க நீங்கள் கையாளும் முறை அவசியமுமில்லை. நன்மையும் பயக்காது. முற்போக்கு சக்திகளுடன் ஒத்துழைப்பதே நாட்டின் உண்மையான விசுவாசம். வகுப்புவாத விஷக்கிருமிகளை போக்குங்கள் முன்னேற்றம் கௌரவம், சுதந்திரத்திற்கு அலைவ அபாயம் விளைவிக்கக் கூடும். விசுவாசத்தை தெரிவிக்கும் பழைய முறைகள் இன்று மாறிவிட்டன. அதிகார வர்க்கத்திற்கு விசுவாசம் காட்டுவதில் அர்த்தமில்லை சுதந்திர ஜனநாயக நாட்டிற்கு மக்களே யஜமானர்கள். நம்முடைய ஓட்டுக்களைப் பெற்றுத்தான் நிர்வாகிகளாக வர முடியும். இந்த நாட்டின் நம்முடைய உயிர், உடை, கௌரவம் அமைதியை காப்பாற்றும் பொறுப்பை அவர்களிடம் நாம் ஒப்படைத்திருக்கிறோம். பொது மக்களுக்கு விசுவாசமாக நடப்பதாய் நிரூபிக்க வேண்டியது அவர்கள் கடமை. நாம், நமக்கும், நாட்டிற்கும் விசுவாசமுள்ளவர்களாக இருந்தால் அரசாங்கத்திற்கும் விசுவாசிகளாக இருக்கமுடியும்

# முஸ்லிம்கள் யார்?

இஸ்லாம் இன்னதென்று உணர்ந்து இஸ்லாமிய அச்சில் வார்க்கப்பட்ட வாழ்க்கையை மேற்கொண்டு நடக்கும் முஸ்லிம்களும் உண்டு, முஸ்லிம் வயிற்றிலே பிறந்துவிட்டதால் முஸ்லிம்கள் என்றுச் சொல்லிக்கொள்ளும் முஸ்லிம்களும் உண்டு. முஸ்லிம்களை இவ்விதம் இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம். இஸ்லாம் என்பது சருமம், சதை, உதிரம், எலும்பு, நரம்புகளின்பெயரல்ல, நோக்கங்கள், கொள்கைகள் நம்பிக்கைகளால் இஸ்லாம் உருவாகின்றது இஸ்லாமிய கொள்கைகளை உணர்ந்து அதையனுசரித்து நடக்காதவரை ஒருவன் முஸ்லிம் ஆகமுடியாது. இன்றைய முஸ்லிம்களின் கேவல நிலைமைக்கு பெயரளவில் உள்ள அவர்கள் மதமே காரணம். எதிர்காலத்தில் நிம்மதியாக வாழ்ந்து இஸ்லாமிய கண்ணிய வாழ்க்கைக்கு உத்திரவாத மளிக்கப்பட வேண்டும் என்றால் நாம் உண்மை முஸ்லிம்களாக இருக்க முயற்சிக்கவேண்டும். காலங்கடத்தாது நம்முடைய அடிப்படை குறைகளை போக்கிக்கொள்ள வேண்டும். இன்று கிடைத்திருக்கும் கடைசி அவகாசத்திற்குப் பிறகு நம்மை நாம் திருத்திக்கொள்ள காலம் நமக்கு அவகாசம் அளிக்கப்போவதில்லை.

ராணுவ விதிகளுக்கு கட்டுப்பட்டு நடக்கும் சோல்ஜருக்குத்தான் உரிமைகளைக் கேட்க உரிமையுண்டு. அவனுக்குத்தான் உரிமைகள் வழங்கப்படும் மேலதிகாரிகளுக்கு கட்டுப்படாமல் பொறுப்பை தட்டிக்கழித்து கடமையைச் செய்யாமல் இருப்பதோடல்லாமல் ராணுவ விதிகளுக்கு நேர்மாறாகவே நடக்கும், சோல்ஜர் ஒருவன் உரிமைகளை பெற முடியாது. கோர்ட் மார்ஷல் தண்டனைக்கே உரியவனாவான். இஸ்லாமிய சோல்ஜர்தான் முஸ்லிம்கள். இஸ்லாமின் பெயரால் உரிமைகளைக் கேட்க இஸ்லாமிய சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பவர்களுக்கே உரிமையுண்டு. இஸ்லாமிய போதனைகளை புறக்கணித்துச் சட்ட திட்டங்களை அலட்சியம் செய்து இஸ்லாமுக்கு நேர் விரோதமான வாழ்க்கையை நடத்துபவர்கள் இஸ்லாமின் பெயரால் உரிமைகள் கேட்பதும் இஸ்லாம் இஸ்லாமென்று கூப்பாடு போட்டு "நாம் முஸ்லிம்கள், நம்முடைய உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும்." என்று கத்துவற்கு எவ்வித உரிமையும் கிடையாது. இஸ்லாமிய கடமைகளை நிறைவேற்றாத இந்திய முஸல்மான்கள் உரிமைகளைக் கேட்கலாம். ஆனால் இஸ்லாமின் பெயரால் அல்ல. இஸ்லாமிய விரோதிகள் அவர்களே யாவர். தூக்கு மேடைக்கும் ஜன்ம தண்டனைக்குமே அவர்கள் உரியவர்கள். இஸ்லாமிய கடமைகளை சரிவர நிறைவேற்றி உரிமைகளைக்கேட்டால் ஒருக்காலும் தோல்வி ஏற்பட முடியாது. இஸ்லாம் என்றுமே நம்பிக்கை இழக்கச் செய்வதில்லை. இஸ்லாமுக்கு மாறான வாழ்க்கையை நடத்திக் கொண்டே இஸ்லாமின் பெயரால் நமக்கு வேண்டியதைப்பெற முயற்சிப்பதே நம்முடைய தோல்விகளுக்கு பெருமளவு காரணம்,

முஸ்லிம்கள் பக்தி கலந்த நேர்மையான வாழ்க்கையை நடத்த வேண்டுமென்றும் அப்படிச் செய்தால் அவர்களுக்கு மனித வர்க்கத்தினிடையே உயர் நிலை கிடைக்குமென்றும் திரு. குர்-ஆன் உறுதியளிக்கின்றது அவ்வித உயர்நிலை முஸ்லிம்கள் ஏன் இழந்துவிட்டனர்? குர்-ஆன் அளிக்கும் உறுதி பொய்யா, (எந்த முஸ்லிமும் அப்படி நினைக்கவும் முடியாது.) அல்லது நாம் குர்-ஆனை அலட்சியம் செய்துவிட்டோமா? நேர்மைக்கு மாறாக நாம் நடந்தோம் பொய்யும் பிரட்டும் கையாண்டோம். அக்கிரமத்தில் இறங்கினோம். ஒழுக்கம் இழந்தோம். குர்-ஆன் நம்மை முன்னேற்றிச் செல்ல விரும்புகிறது. நாம் பின்னோக்கி ஓடினோம் அதன் பலனாக இன்று நாம் இகழ்ச்சி அடைந்தோம். கேவலப்பட்டோம். அழிந்தோம். நம்முடைய கௌரவத்தின் பிரகாச தீபம் அணைந்தது. வாழ்விலும், தாழ்விலும் மற்றவர்களின் தயவையும் தாட்சண்யத்தையும் எதிர்பார்த்திருக்கும் அளவுக்கு பலஹீனமடைந்தோம். இஸ்லாமின் கௌரவம் குலைந்தது. முஸ்லிம்களின் செய்கைகளுக்கு இஸ்லாம்மீது குறை கூறப்படுகின்றது இஸ்லாமை பரப்புவது ஒருபுறமிருக்க முஸ்லிம்கள் நிலைத்திருப்பதே கஷ்டமாகிவிட்டது

நம்முடைய கையில் இஸ்லாமிய தாசு கொடுக்கப்பட்டிருந்தது. நியாயத்தையும், சத்தியத்தையும்நிலை நிறுத்தி கடவுளின் சிருஷ்டியை அக்ரமம் அநியாயத்திலிருந்து காப்பாற்றி நேர்மை, ஒழுக்கத்தின் கொடியை உயர்த்தி, உலகத்தை தவறான வழியினின்றும் திருப்பி, சத்திய வழியில் ஈடுபடுத்தி, மனிதவர்க்கத்திற்கு ஒழுக்கம் கற்றுக்கொடுத்து, அறிவைத் துலக்கவேண்டியது, முஸ்லிம்களின் கடமை. அக்ரமத்தை தடுப்பதைவிட்டு அக்ரமம் செய்பவர்களும் ஒழுக்கம் கற்றுக்கொடுப்பதை விட்டு ஒழுக்கம் இழப்பவர்களும் இஸ்லாமுக்கு எவ்வித சேவையும் செய்ய முடியாது.

# கடிதங்கள்.

## தஞ்சை ஜில்லா அரசியல் மகாநாடு, அதிராம்பட்டணம்.

8—10—48 மாலை 3-மணிக்கு அதிராம் பட்டணம் ரெஸ்ட் ஹவுசில் தஞ்சை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஸ்ரீ A. M. சாமிநாத செட்டியார் அவர்கள் தலைமையில் பட்டுக்கோட்டை தாலுக்காவிலுள்ள காங்கிரஸ் கமிட்டிகளின் தலைவர்கள், காரியதரிசிகள், பிரமுகர்கள் அடங்கிய கூட்டம் ஒன்று நடைபெற்றது. அவ்வமயம் நவம்பர் மாதத்தில் தஞ்சை ஜில்லா அரசியல் மகாநாட்டை அதிராம் பட்டணத்தில் நடத்த கீழ்க்கண்ட நிர்வாகஸ்தர்கள் அடங்கிய வரவேற்பு கமிட்டி அமைக்கப்பட்டது.

தலைவர் :— ஸ்ரீ V. நாடிமுத்து பிள்ளை, M. C. A. பட்டுக்கோட்டை

உபதலைவர் :— ஸ்ரீ A. கிருஷ்ணசாமி வாண்டயார் பூண்டி.

,, K. S. சாம்பசிவ அய்யர் குன்னியூர்.

,, A. M. சாமிநாதசெட்டியார் நாகை.

,, R. A. அருணாசலய்யர் அதிராம்பட்டணம்.

,, T. P. தருமலிங்க தேவர் தம்பிக்கோட்டை.

காரியதரிசிகள் :—

ஸ்ரீ T. K. ஸ்ரீநிவாசய்யர், தஞ்சை

ஸ்ரீ S. S. முகம்மது இப்ராகிம் — அதிராம்பட்டணம்

,, R. வரதராஜலு ,, ,

,, T. R. வெங்கடசுப்பிரமணியம் ,, ,,

,, R. M. கோவிந்தசாமி செட்டியார் பட்டுக்கோட்டை.

,, N. சுந்திரேசன், தம்பிக்கோட்டை.

,, நடராஜ ஓந்திரியர், நம்பிவயல்

பொக்கிஷதார் :— ஸ்ரீ S. வெங்கட்டராமய்யர் பட்டுக்கோட்டை.

இங்ஙனம்,
R. வரதராஜலு,
வரவேற்பு கமிட்டி, காரியதரிசி.
11—10—48.

ஃ ஃ ஃ

## பாரத இளைஞர் சங்கம்.

### செஞ்சை, காரைக்குடி.

செஞ்சை 2—10—48 சனிக்கிழமை மாலை 6-மணிக்கு பாரதி இளைஞர் சங்கத்திலிருந்து காந்திஜி உருவப்படத்துடன் ஊர்வலம் புறப்பட்டு செஞ்சையிலுள்ள முக்கிய தெருக்களின் வழியாகச் சென்று மாரியம்மன் கோவிலை அடைந்ததும் திரு. சி. ராம சின்னச்சாமி அவர்கள் தலைமையில் காந்திஜி பிறந்த தின விழாவும், மது விலக்கு தினமும் ஒருங்கே இணைத்துக் கொண்டாடப் பட்டது. அவ்வமயம் சி. ராமசாமி, மு. சின்னையா முதலியவர்கள் சொற்பெருக்காற்றினர்கள். பொதுமக்களுக்குத் தின்பண்டங்கள் வழங்கியபின் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

மு. சின்னையா,
காரியதரிசி.
3—10—48

---

இஸ்லாம் குலத்தையும், தேசத்தையும் பொருத்த தல்ல க்ஷேமம் நடத்தலைப பொருத்தேயிருக்கிறது. ஒவ்வொரு முஸ்லிமும் தன்னுடைய நோக்கங்களைச் செப்பனிட்டு இஸ்லாமிய வழியைவிட்டு பிறழாமல் இருக்கவேண்டும். சிந்தனாசக்தியையும், அறிவையும் துலக்கி மெருகு கொடுக்கவே இஸ்லாம் தோன்றிற்று உங்கள் அறிவைக்கொண்டு சிந்தியுங்கள். உங்கள் கண்களைக்கொண்டு பாருங்கள். உங்கள் காதுகளைக் கொண்டு கேளுங்கள் என்று இஸ்லாம் சொல்லுகின்றது. உண்மைக்கு மாறான விஷயங்களை முஸ்லிம்கள் கேட்கவோ ஏற்கவோ கூடாது. நடப்பதை கண்களைக்கொண்டு பார்த்து அதனால் படிப்பினையை கற்றுக் கொள்ளவேண்டும். அர்த்தமற்ற பேச்சுகளுக்கு மூளையில் இடமளித்து, ஆதாரமற்ற வதந்திகளை நம்புவது முஸ்லிம்களின் வேலையல்ல, புலன்களைச் சரியான வழியில் பிரயோஜனப் படுத்திக் கொள்ளும் முஸ்லிம்கள் சம்பவங்களின் தன்மையை தெரிந்துகொள்ளவும், உண்மைகளை உணர்ந்து உகந்த வழியில் நடந்துகொள்ளவும் முடியும். அவனுடைய பேச்சில் நிதானமும் கம்பீரமும் காணலாம். முஸ்லிம்கள் தீக்ஷண்யமான அறிவுள்ளவர்கள் என்று உலகத்தோர் மெச்சுவார்கள். முஸ்லிம்களின் சகல கஷ்டங்களும் நீங்க அது ஒன்றே போதும்.

ஜெய்ஹிந்த் !

## முறையூர் மது விலக்கு தின விழா.

முறையூர் அக்டோபர் 2. ஊர் பொது மன்றத்தில் 30—9—48 ம் தேதி ஸ்ரீ சி. ந. சி. சின்னத்தம்பி அம்பலம் அவர்கள் தலைமையில் 25 மெம்பர்களைக் கொண்ட மதுவிலக்கு கமிட்டி அமைக்கப்பட்டது.

இன்று எல்லா கோவில்களிலும் விசேஷ பிரார்த்தனைகள் நடத்தப்பட்டது. மாலை சதுர்வேத மங்கலம் சப்இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ் ஸ்ரீ கிருஷ்ணசாமி அய்யர் தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தது. அதில் ஸ்ரீமான்கள் R. சுப்பிரமணிய அய்யர், M. N. நாராயணசாமி அய்யர், P. R. அபூபக்கர், ராமசுப்பிரமணியம் முதலானோர் சொற்பொழிவாற்றினர்.

சுமார் 1000 ஜனங்களுக்கு 'டீ' வழங்கப்பட்டது. ( ந. சி. )

ஃ ஃ ஃ

### சிங்கம்புனரி

6—10—48-ல் இவ்வூரில் காந்தி ஜயந்தி விழா விமரிசையாக நடைபெற்றது. 80 ஜோடி காளைகள் பூட்டிய ரதத்தில் காந்திஜியின் உருவப்படத்தை அலங்கரித்து ஊர்வலம் நடைபெற்றது. ஆ. சி. சே. சேவுகப்பெருமாள் அம்பலம் தலைமையில் ஓர் கூட்டம் நடைபெற்றது. A ராமசாமி அம்பலம் அவர்களால் கொடியேற்றி வைக்கப்பட்டது. டாக்டர் K; S. சர்மா, K. கிருஷ்ண தேவர் முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். ஆஸாத் ஆசிரியர் அப்துல் ஹகீம் அவர்கள் உணர்ச்சி ததும்ப ஒரு நீண்ட பிரசங்கம் செய்தார். A. சுப்பையா அவர்களின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிவடைந்தது.

ஆ. வெ. முத்துக்கருப்பவேணு படையாச்சி.
காரியதரிசி.

ஃ ஃ ஃ

### மணலூர்பேட்டை

திருக்கோயிலூர் தாலுக்கா காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் மணலூர் பேட்டையில் 9—10—48-ல் கூடியபோது செய்த தீர்மானங்கள்.

நமது ஜில்லா காங்கிரஸ் கமிட்டி மெம்பரும் மணலூர்பேட்டை காங்கிரஸ் முக்கியஸ்தருமான ஸ்ரீ P. T. தங்கவேல் செட்டியார் 18—9—48-ல் அகால மரணம் அடைந்ததற்கு வருந்தியும் அன்னார் குடும்பத்துக்கு கமிட்டியின் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டும் இந்த தாலுக்காவின் அரசியல் தியாகிகளுக்கு சர்க்காரால் வழங்கப்பட்ட நிலங்களை அடைவதில் இருக்கும் இடையூறுகளை நிவர்த்திக்க ஜில்லா கலெக்டர், ஜில்லா தியாகிகள் நிவாரணக் கமிட்டி, தாலுக்கா டிப்டி கலெக்டர், டிப்டி சூப்ரின்டெண்ட் இவர்களைக் கேட்டுக்கொள்வதென்றும், மணலூர் பேட்டைக்கு ஒரு ஆஸ்பத்திரியும், பள்ளிக்கூடத்துக்கு கிணறும், கக்கூசும் ஏற்படுத்திக்கொடுக்க ஜில்லா போர்டாரை கேட்டுக்கொள்வதென்றும், மணலூர் பேட்டை எலவாருசூர் பிர்க்கா காங்கிரஸ் கமிட்டி மணம்பூண்டி கிரும காங்கிரஸ் கமிட்டிக்கு நடந்த தேர்தலை அங்கீகரித்து கமிட்டியின் கூட்டம் இனிது முடிந்தது.

மாலை 6-மணிக்கு மணலூர்பேட்டையில் காந்தி ஜயந்தி மதுவிலக்கு விழா கடைசி தினத்தில் தாலுக்கா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி R. நடராஜன் தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தது. கூட்டத்தின் முடிவில் பள்ளி மாணவ மாணவிகளால் மதுவிலக்கு விஷயமாக பாட்டுகள், சம்பாஷணைகள், நாடகம் நடத்தப்பட்டு பி. கா. கமிட்டியாரால் கொடுக்கப்பட்ட பரிசுகளை அந்த பிர்க்கா ரெவின்யூ இன்ஸ்பெக்டரால் வழங்கப்பட்டு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது. அன்று நடந்த மணலூர்பேட்டை பிர்க்கா காங்கிரஸ் கமிட்டி தேர்தலில் ஜனாப் ஆமது உசேன் தலைவராகவும், கோதண்டபாணி காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

R. நடராஜன், காரியதரிசி.

ஃ ஃ ஃ

### வாணியம்பாடி.

வாணியம்பாடியில் மஹாத்மா காந்தி ஜெயந்தி விழா 10—10—48 ஞாயிற்றுக்கிழமை காலையில் நேத்தாஜி சவுக்கில், ஹிந்து உயர்தர பாடசாலை தலைமை உபாத்தியாயர் C. S. சூரியநாராயண அய்யர் அவர்கள், தேசீயக்கொடி யேற்றினார் மத்தியானம் 3-மணிக்கு மஹாத்மா திருவுருவப்படத்தை புஷ்ப ரதத்தில் வைத்து ஊர்வலமாக முக்கிய வீதிகளின் வழியாக சென்று நேத்தாஜி சவுக்கில் முடிவு பெற்றது. மாலை 7-மணிக்கு நேத்தாஜி சவுக்கில் பொதுக்கூட்டம் நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் K. சுப்ரமணிய செட்டியார் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் வலங்கைமான் அப்துல் சத்தார், கும்பகோணம் "ஆஸாத்" வாரப் பத்திரிகை, ஆசிரியர் :- ஜனாப் மௌலானா அப்துல் ஹகீம் சாயபுஜீயும் தி. சரஸ்வதி பாண்டுரங்கம், K. R. கல்யாணராமய்யர் ஆகியவர் மஹாத்மா காந்தியின் வாழ்க்கையின் வரலாறுகளைப் பற்றியும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையைப்பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள் கடைசியில் நகர காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி, N. M. பாஷா வந்தனோபசாரம் கூற கூட்டம் முடிவுபெற்றது

N. M. பாஷா. காரியதரிசி,
நகர காங்கிரஸ் கமிட்டி, வாணியம்பாடி, (வ ஆ.)

# சென்னைப் பிரதமர் பேரம் பேசுகிறாரா?

## பண்டாரவாடையில் இஸ்மாயில் விஷமம்.

(‘ராஜ் முஹம்மது’ - கிராம காங்கிரஸ் கமிட்டி மெம்பர், பண்டாரவாடை.)

ஹைதராபாத் ரஸாக்கர் தலைவனுக்குப் பிறகு சென்னை மாகாணத்தில் ஒரு காஸிம் ரஸ்வி முளைத்திருப்பதாகத் தெரிகிறது. அழுகிப் போன லீக் பிணத்தை வெட்கமின்றி சுமந்து திரியும் இஸ்மாயில் ராவுத்தர் பழைய விஷமப் பிரசாரத்தையும் கைவரிசையையும் ஆரம்பித்திருக்கிறார். பிரிவினைக்குப் பிறகு பதுங்கிக் கிடந்த பேர்வழி திரும்பவும் வாலாட்டுகிறார். பிரிவினைக்கு முன் செய்ததைப்போல் காங்கிரஸுக்கும், காங்கிரஸ் முஸ்லிம்களுக்கும் எதிராகப் பேச தைரியமோ, திராணியோ கிடையாதென்பது வெளிப்படை. இந்தியாவை தங்கள் தாயகமென்றும் சர்க்காரை தங்கள் சர்க்கார் என்றும் நினைக்கும் முஸ்லிம்களை சமூக துரோகிகள், ஹிந்துக்களின் கூலிகளென்று பகிரங்கமாய் பேசினால் என்ன கிடைக்குமென்று அவருக்கு நன்றாகத் தெரியும் ஆகையால் தன்னுடைய விஷமப் பிரசாரத்திற்கு மசூதிகளைத் தேர்ந்தெடுத்திருக்கிறார் போலும்.

பண்டாரவாடை நிறைய முஸ்லிம்களைக்கொண்டதொரு கிராமம். இங்கு நீண்டகாலமாகவே காங்கிரஸ் பற்றுள்ள முஸ்லிம்கள் உண்டு. கட்சிப்பற்றற்ற முஸ்லிம் பிரமுகர்களுமிருக்கின்றனர்.

8—10—48-ல் பண்டாரவாடை முஸ்லிம்கள் ஜனப் கூ. அ. அப்துல்மஜீத் சாஹிப் ‘அல்கலாம்’ ஆபீஸில் கூடி கிராம காங்கிரஸ் கமிட்டியை அமைத்தனர். 11—10—48-ல் இந்திய டொமினியன் லீக் தலைவர் இஸ்மாயில் ராவுத்தர் பண்டாரவாடை வந்தார். ‘முஸ்லிம்’ தினசரி பத்திரிகைக்கு நிதி திரட்டுவதாய் சொல்லிக்கொண்டு பண்டாரவாடை மசூதியில் முஸ்லிம்களை திரட்டி கீழ்வருமாறு பேசினார்.

“பண்டாரவாடை முஸ்லிம்கள் நிறைந்த கிராமம். இங்குள்ள முஸ்லிம்கள் லீகையே ஆதரிக்க வேண்டும்; காங்கிரஸ் க்ஷீணித்து வருகின்றது. ஆகையால் காங்கிரஸுக்கு பலம் திரட்ட முஸ்லிம்களில் சிலர் ஹிந்துக்களின் தூண்டுதல் பேரில் கிளம்பி இருக்கின்றனர். முஸ்லிம்கள் ஒரே கொடியின் கீழ் திரண்டு நிற்கவேண்டும். அப்பொழுதுதான் சலுகைகளைப்பெற முடியும். சென்னை மாகாண மந்திரி சபையில் இரண்டு முஸ்லிம்களுக்கு இடமளிக்க பிரதமர் ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் பலமுறை முன்வந்திருக்கிறார். இந்தியாவின் இதர மந்திரி சபைகளிலும் முஸ்லிம்களுக்கு இடமளித்தாலன்றி சென்னை மாகாண மந்திரி சபையில் பதவி ஏற்க முடியாதென்று உதறித்தள்ளிவிட்டேன். இவ்விஷயத்தில் இந்தியாவின் பிரதமர் ஜவஹர்லால் நேருவிடம் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறேன். இக்கட்டத்தில் முஸ்லிம்கள் காங்கிரசில் சேருவது முஸ்லிம் சமூகத்துக்கு தீங்குசெய்வதாகும்.”

தனிப்பட்ட முறையில் முஸ்லிம்களுக்கு என்ன உபதேசித்தார் என்பது தெரியவில்லையாயினும் அவர் பேசிவிட்டுச் சென்றவுடன் பண்டாரவாடையில் காங்கிரஸ் முஸ்லிம்களுககு தொந்தரவு கொடுக்கும் வேலைகள் தலைதூக்கி இருக்கின்றன. காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர் பதவியும் காங்கிரஸ் சந்தாதார் பதவியும் ராஜீனமா செய்யும்படி நிர்ப்பந்தம் நடக்கின்றது. வீடுகளுக்குமுன் ஆத்திர மூட்டத்தக்க கோஷங்கள் கோஷிப்பதும் பகிஷ்காரம் செய்யப்போவதாக பயமுறுத்துவதும் ஆரம்பமாய்விட்டது. காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர் S. O. K. அப்துல் சலாம் சாமியார் கமிட்டியிலிருந்து ராஜீனமா செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார். பகிஷ்கார பயமுறுத்தலால் டீக்கடை அப்துல்காதர் ராவுத்தரும் பாத்தியாவுக்கு கூப்பிடமுடியாதென்று சொன்னதால் அதுப்ல் சலாம் லெப்பையும் காங்கிரஸ் சந்தாதாரர் பதவியை ராஜீனமா செய்திருக்கின்றனர்.

பிரிவினைக்குப்பிறகு பண்டாரவாடை முஸ்லிம்கள் உண்மையை உணர்ந்திருந்தனர். அவர்களுடைய ஆர்வத்தால் காங்கிரஸ் கமிட்டியும் அமைந்தது. காங்கிரஸ் முஸ்லிம்களுக்கு எவ்வித தொல்லையும் இருக்கவில்லை. இஸ்மாயிலின் வருகைக்குப்பிறகு ஒரு சில பொறுப்பற்ற விஷமிகள் தலைதூக்கி யிருக்கின்றனர் காங்கிரஸ் கமிட்டியே கலைக்கப்பட்டுவிட்டதாக பொய் பிரசாரங்கள் நடக்கின்றது. மேலே குறிப்பிட்ட மூவரைத்தவிர காங்கிரஸிலிருந்து யாருமே விலகவில்லை. இன்னும் காங்கிரஸில்சேர பல முஸ்லிம்கள் முன்வந்திருக்கின்றனர்.

இந்திய டொமினியனில் விஸ்வாசமுள்ள பிரஜைகளாக அமைதியுடன் வாழ ஆசைப்படும் முஸ்லிம்களின் அமைதிக்குபங்கம் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டியது சர்க்காரின் கடமை. வாயினால் விஸ்வாசம்பேசி உள்ளுக்குள் விஷமத்தனம் செய்யும் இஸ்மாயில்கள் போன்ற காசிம்ரஸ்விகளுடன் பேரம் பேசுவது உண்மையயின் அதைவிட்டு அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி பிரதமரை கேட்டுக்கொள்ளுகின்றேன்.

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 18—10—'48 திங்கட்கிழமை { இதழ் 37


## அக்டோபர் 2-ன் படிப்பினை

இந்தியா ஜீவித்திருக்கும் வரை, ஏன்? உலகில் நேர்மை நிலைத்திருக்கும் வரை, இல்லை! தர்மத்துக்கும் அதர்மத்துக்கும், சத்தியத்துக்கும் அசத்தியத்துக்கும், அன்புக்கும், வெறுப்புக்குமிடையே பாகுபாடு செய்யும் உணர்வு இம்மியளவும் உள்ளவரை அக்டோபர் 2-ந்தேதியை உலகம்மறக்கப்போவதில்லை. அந்த நாள், இரண்டாயிரம் வருஷங்களுக்குப்பிறகு மஹாத்மா புத்தரின் உபதேசங்களை உயிர்ப்பித்த உத்தமர் அவதரித்த நாள்; அந்த நாள், தன்னுடைய அரும்பெரும் புதல்வனை பாரதநாடு பெற்றெடுத்த நாள்; தன்னலமற்ற வீரத்தியாகியை, தன்னுடைய, மாபெரும் உபகாரியை மானிட வர்க்கம் தோற்றுவித்த நாள்; அந்த நாள் உலகம் மறந்து விட்டிருந்த ஏசுநாதரின் அன்பை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்து காட்டிய குணசீலரை ஆசியா கண்டம் கண்டெடுத்தநாள்; அந்த நாள், மஹாத்மா காந்திஜீ பிறந்த நாளாகும்.

இந்தியர்களுக்கு காந்திஜீ வேறு இந்தியா வேறல்ல இரண்டும் ஒன்றுதான். ஆத்மாவை சரீரத்திலிருந்து பிரித்துக் காட்ட முடியாததைப்போலவே காந்திஜீயை இந்தியாவிலிருந்து பிரிக்க முடியாது, இந்திய சமுதாயத்தந்தையான காந்திஜீ நவ இந்தியாவை உருவாக்கினார். எனவே அவருடைய ஜன்மதினமே இந்தியாவின் ஜன்மதினமாகும். இந்தியாவைப் போலவே உலகம் பூராவுக்கும் அக்டோபர் இரண்டாந்தேதி முக்கிய நாளாக விளங்கப்போகும் காலம் வெகு வேகமாய் வந்துகொண்டிருக்கிறது.

காந்திஜீயின் வாழ்க்கையும், உபதேசங்களும் ஏதாவது ஒரு மதத்தினர், வகுப்பினர், சமூகத்தினர், இனத்தினர், ஜாதியினர், நிறத்தினர், பிரிவினருக்கு மட்டும் சொந்தமல்ல. மனிதவர்க்கத்துக்கே பொதுவான செல்வமாகும். ஒரு ஹிந்துவுக்கு உண்மையான ஹிந்து; ஒரு இந்தியனுக்கு சிறந்த இந்தியன்; ஒரு ஆசியாக்காரனுக்கு சரியான ஆசியாவாசி; ஒரு அரசியல் வாதிக்கு பழுத்த அரசியல் விவேகி; ஒரு துறவிக்கு எல்லாவற்றையும் துறந்ததொரு சந்நியாசியாகவே மஹாத்மாஜீ காட்சியளித்தார்.

முஸ்லிம்களுக்கோர் அத்தியந்த நண்பர்; தீண்டப்படாத, ஒடுக்கப்பட்ட மக்களுக்கோர் உபகாரி; அடிமை சமூகங்கள், கருப்பு நிறந்தவர்களுக்கோர் விமோசனம்; சத்தியத்தை நாடுபவர்களுக்கோர் வழிகாட்டி; ஒழுக்கத்துக்கோர் குன்று; அன்புக்கோர் உறைவிடமாகவே காந்திஜி வாழ்ந்தார். யாருக்கும் விரோதியல்ல; எல்லோருக்கும் நண்பர்; பிற நலத்துக்கு தன்னை அர்ப்பணித்தவர்; பிறர்க்குரியராகவே வாழ்ந்து பிறருக்காகவே ஆத்மதியாகமும் செய்த கர்ம வீரர்; யாரும் அவருக்கு அன்னியரில்லை; மக்களைப்பிரிக்கும் எவ்வித கூற்றையும் அவர் ஒப்புக்கொண்டதேயில்லை.

அவரைப் பொருத்தவரை அவர் தனக்காகவே உயிர் நீத்தார் வாழ்க்கை முழுதும் நேசித்து வந்த லட்சியங்களுக்காக முடிவில் ஆத்மாவையும் அர்ப்பணித்தார்.

பாபுஜீ அமரத்வம் பெற்றார். அவருடைய லட்சியங்கள் அழிவற்ற நிலை எய்தின. லட்சியவாழ்க்கை வாழ்ந்து லட்சியங்களுக்காக வீர மரணமடைந்தார் பாபூஜி இன்றைய ஆடம்பர உலகில் மிகவும் எளிய வாழ்க்கை நடத்தினர். ஆயினும் அவருடைய வாழ்க்கையின் தனிப்பெருஞ் சிறப்புக்குமுன் பெரிய பெரிய மனிதர்களும் சிறியவர்களாகவே காணப்பட்டனர். ஆத்ம பலத்தின் அலங்காரமும் அன்பின் அழகும் அவருடைய வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் பரிணமித்தன. போலிப் படாடோபமும் ஆடம்பரமும் அங்கு மருந்துக்கும் இருக்கவில்லை. போராட்டங்கள் நிறைந்த புரட்சிகரமான வாழ்க்கை நடத்திய அவரது அன்புகனிந்த தேன்மொழிகள் கோடிக்கணக்கான மக்களுக்கு சாந்தியளித்தன.

உலகத்திலேயே பெரிய ஏகாதிபத்தியத்துக்கெதிராக "ஆம்! நான் ஒரு புரட்சிக்காரன்" என்று மார் தட்டிக்கூறினர். வாழ்க்கையின் பெரும் பகுதி போராட்டங்களில் கழிந்தது. ஒரு விநாடிக்கேனும் அவரது உறுதியில் தடுமாற்றம் கண்டதில்லை. தான் எதிர்த்துப் போராடிய அந்த நாட்டினரிடம் கூட அவருடைய உள்ளத்தில் வெறுப்போ, விரோதமோ ஏற்பட்டதில்லை. மிருகபலம்கொண்ட ஒரு ஏகாதிபத்தியத்தின் கொட்டத்தை அடக்குவதற்கு துப்பாக்கிகள், பீரங்கிகள், அணுகுண்டுகளைத் தேடவில்லை. அன்பு, அஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட

சத்தியாக்கிரக ஆயுதத்தைக் கொண்டு சாத்வீதமாய் தாக்கி சூரியன் அஸ்தமிக்காமலிருந்த ஏகாதிபத்தியம் சரணடையும்படிச் செய்தார் காந்தீஜி.

அது மட்டுமல்ல. காந்தீஜி சமூகத்தின் போலிப் பழக்கவழக்கங்களை எதிர்த்தும் போராடினார். தீண்டாமை சாபக்கேடு, ஜாதீய ஏற்றத் தாழ்வு என்னும் இயற்கைக்கு எதிரான பொய்க்கூற்று, குறுகிய மனப்பான்மை, வகுப்புவாதம் முதலிய மக்களை பிளவு படுத்தும் எல்லா சக்திகளையும், ஜன நாயகத்தின் பெயரால் அடிமை சமூகங்களை சுரண்டும் சாம்ராஜ்யக் கொள்கையையும் தீவிரமாய் எதிர்த்தார். ஆயினும் தன்னுடைய போராட்டத்துக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்களை குறை கூறவோ, ஒருவர்மீதும் வெறுப்படையவோ, கோபப்படவோ, ஒருவருக்கும் எதிராக பலாத்காரத்தை உபதேசிக்கவோ யில்லை.

அன்பின் மூலம் தீமைகளை அகற்றமுடியுமேயல்லாது பலாத்காரத்தின் மூலமல்லவென்றே உபதேசித்தார். மனதிலுள்ளதை அப்படியே வெளியிட்டு அதன்படி நடந்தும் காட்டினார். அணுக்குண்டை நம்பி அழிவை நோக்கி ஓடும் உலகுக்கு சத்தியாக்கிரகத்தின் சக்திவாய்ந்த ஆயுதத்தை அளித்து தப்புவதற்கு உபாயம் காட்டினார். நாகரீகமும் ஒழுக்கமும் நிலைத்திருக்க வேண்டுமானால் அன்பு சத்தியம் அஹிம்சையின் அழிவற்ற கொள்கையின் மூலமே சாத்தியமென்று போதித்தார். காந்திஜியின் வாழ்க்கையை குறித்து ஆயிரக்கணக்கான பிரசுரங்கள் வெளிவந்துள்ளன; வந்துகொண்டுமிருக்கின்றன. ஆயினும் அவருடைய முயற்சியின் உயர்ச்சியை பூரணமாக வருணிக்க முடியுமாவென்பது சந்தேகந்தான். இருப்பினும் தன் வாழ்நாட்களிலேயே இவ்வளவு அபார செல்வாக்குபெற்ற ஒருமனிதனை - தன் மரணத்தைக் குறித்து கண்ணீர் சொரியும் பலகோடி கண்களையும் உள்ளங்களையும் விட்டுச்சென்ற ஒரு குணசீலனை - உலகம் பூராவையும் துக்கத்தில் ஆழ்த்திவிட்டுமறைந்த ஒரு உபகாரியை - வாழ்க்கைமுழுதும் போராட்டதில் கழித்திருப்பினும் மரணபரியந்தம் ஒரு எதிரியையும் ஏற்படுத்திக்கொள்ளாத ஒரு வீரனை-தன் மரணத்தைக் குறித்து மற்றவர்களைவிட அதிகமாய் தன்னை எதிரி என்று நினைத்தவர்கள் கண்ணீர் வடிக்கும்படி செய்த பிறநலவாதியை உலகம் கண்டதில்லை என்பது மட்டும் நிச்சயம். சென்ற வருஷத்தைப் போலவே இவ்வருஷமும் காந்தி ஜெயந்தியை கொண்டாடினோம். ஆயினும் இவ்வருஷம் நம்மிடையே காந்திஜி இல்லை. காந்திஜி மரணமடைந்துவிட்டார். அவரைக்கொன்றவர்கள் யார்? ஒருவெறியனா? இல்லை! நாமே கொன்றோம்! பாபூஜி என்று அழைத்த இந்தியர்களே கொன்றார்கள். 'டில்லிக்கு வந்திருக்கிறேன் செய்வேன் அல்லது செத்து மடிவேன்' என்று சொன்னதை காந்திஜி பூர்த்திசெய்தார், சகோதரன் சகோதரனைக் கொல்லும் இந்தியாவில் தன்னால் உயிர்வாழ முடியாதென்று காந்திஜி சொல்லியிருக்கவில்லையா? அவருடைய உபதேசங்களைக் கேட்டு நாம் நடந்திருந்தால் யாராவது பாபூஜியை கொலை செய்திருக்க முடியுமா? அவருடைய உபதேசங்களை அலட்சியம் செய்து அவருடைய ஆத்மாவுக்கு வேதனை கொடுத்தோம். தியாகத்தையே போதித்த காந்திஜி தன்னுடைய சரீரத்தை துப்பாக்கி குண்டுக்கு இலக்காக்கி ஆத்மாவை வேதனையிலிருந்து காப்பாற்றிக் கொண்டார். சரீரத்தை அர்ப்பணித்து ஆத்மாவையும் உபதேசங்களையும் கொள்கையையும் நிலைநாட்டி தன்லட்சியங்களை அழிக்க முயற்சித்தவர்களை தோற்கடித்தார் வீரனைப்போல் அரங்கத்தில் உயிர் நீத்தார். வீரதியாகிகளுக்கு மரணமில்லை. இந்தியர்கள் பாபூஜி என்று அழைத்த தங்கள் தந்தையை - தங்களுக்கு விமோசனமளித்த ராஷ்டிர பிதாவை - மாபெரும் உபகாரியை - இந்தியாவின் ஜென்ம தாதாவை - இந்தியாவின் ஜீவனை மறக்கமுடியுமா? அவருடைய சரீரத்தை அழித்த பாவத்துக்கு பிராயச்சித்தமும் அவருடைய ஆத்மாவுக்கு அளித்த வேதனைக்கு பரிகாரமும் செய்வோமா? அவர் காட்டிய வழியில் நடந்து அவருடைய ஆத்மாவுக்கு நிரந்தர சாந்தி அளிப்போமா? நாம் வாழ வைத்தாலும் இல்லாவிடினும் காந்திஜியின் நாமம் என்றுமே வாழும், ஆயினும் அவருடன் நமக்கும் நம்முடன் அவருக்கும் இருந்து வந்த குறிப்பிட்ட துடர்பின் காரணமாக நம்மீது பெரும் பொறுப் பேற்பட்டிருக்கிறது. உலகம் நம்மையும் காந்தீஜியின் இந்தியாவையும் ஆசையுடனும் நம்பிக்கையுடனும் நோக்குகின்றது. நாம் செய்யப்போவதை முடிவு செய்வது நம்கடமை. இச்சந்தர்ப்பத்தில் காந்தீஜியின் லட்சியங்கள் வெற்றிபெற அவருடைய உபதேசங்களை கடைபிடித்து நடக்க பிரதிக்ஞை செய்வோமாக. அன்பு, சத்தியம் நிறைந்த வாழ்க்கை நடத்துவோமாக நம்மிடமிருந்து பாபூஜியைப் பிரித்த வெறுப்பு வேற்றுமையின் தீய சக்திகளை முறியடிப்போமாக.


## வரவேற்கிறோம்.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை, முன்னேற்றம், சமுதாய, ஜனநாயக, சோஷலிஸ, கூட்டுக் கலாசார, அடிப்படையில் அரசியல், பொருளாதார, சரித்திரக் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை வரவேற்கிறோம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் தெளிவாக எழுதும்படி கேட்டுக் கொள்கிறோம். இதர விபரங்கள் தபால் மூலம்.

**மானேஜர், ஆஸாத், கும்பகோணம்.**

# கருஞ்சட்டை இயக்கமும் - முஸ்லிம்களும்

'இஸ்லாமுக்கு ஆபத்து' 'ஹிந்து மெஜாரிடி ஆதிக்கம்'' பாகிஸ்தான் இல்லையேல் கபரஸ்தான்' 'இஸ்லாமியம் வாழ்க! என்ற கூச்சல்களின் பயங்கர விளைவுகளைப் பார்த்தபிறகு 'தமிழுக்கு ஆபத்து' 'வடநாட்டு ஆதிக்கம்' 'திராவிட நாடு இல்லையேல் சுடுகாடு'' திராவிடம் வாழ்க' என்ற கோஷங்களின் விளைவுகள் என்னவாயிருக்குமென்று சுலபமாய்யூகிக்கலாம் இரண்டு கூச்சல்களுக்கும் அதிக வித்தியாசமில்லை.

தமிழ் நாட்டில் ஒரு சிறு கூட்டம் ஹிந்தி ஒழிக! வடநாட்டு ஆதிக்கம் ஒழிக! தமிழ் வாழ்க? தனித் திராவிடநாடு வாழ்க! என்று கூச்சலிட ஆரம்பித்திருக்கிறது. அன்று லீக் மேடைகளில் பாகிஸ்தான் கோரிக்கையை ஆதரித்துப் பேசியவர்கள் இன்று திராவிடஸ்தான் கேட்கின்றனர். முஸ்லிம் லீக் அனுசரித்த முறைகளை அனுசரிக்கின்றனர். ஹிந்து முஸ்லிம் வேற்றுமைக்கு பதிலாக ஆரிய திராவிட வெறுப்பைத் தூண்டுகின்றனர். என்னதான் செய்தாலும் நாட்டைக் கூறு போட இன்று ஆங்கிலேயன் இல்லை. திராவிடஸ்தான் கனவு நனவாகப்போவதில்லை.

கேரள, கன்னட, ஆந்திர ஜில்லாக்கள் உள்பட திராவிடநாடு அமையவேண்டுமென்று தோழர்கள் கேட்கின்றனர் ஆனால் கேரள, கன்னட, ஆந்திர மக்களுக்கு திராவிட இயக்கமென்றால் என்னவென்று கூட தெரியாது. அவர்கள், ஆதரிக்கவும் தயாராயில்லை. விரல்விட்டு எண்ணிவிடத்தக்க ஒரு சிலரைத் தவிர தமிழர்களும் திராவிடநாட்டுக் கோரிக்கையை எதிர்க்கின்றனர். பாகிஸ்தான் பெயரால் லீக்கர்கள் மயங்கியதுபோல் திராவிடஸ்தான் பெயரால் தென்னாட்டு ஹிந்துக்கள் மயங்கவில்லை, இது தோழர்களுக்கே நன்றாகத் தெரியும். ஆகையால் தமிழ்நாட்டு பாமர முஸ்லிம்களுக்கு கருப்புச்சட்டை அணிவித்து தங்களுடன் சேர்த்துக்கொள்ள முயலுகின்றனர். அவர்களுடைய வலையில் சிக்காமல் முஸ்லிம்கள் புத்திசாலித்தனமாய் நடந்துகொள்ள வேண்டியது அவசியம்.

ஒரு முறை பாகிஸ்தானை ஆதரித்து அனுபவித்த இன்னல்களுக்கு பிறகு இந்திய முஸ்லிம்கள் மீண்டுமொரு முறை திராவிடஸ்தானை ஆதரிக்கமாட்டார்கள். இரண்டாகப்பிரிந்த முஸ்லிம் சமூகம் மூன்றாகப் பிரிவதால் அழிவே ஏற்படும். பத்து கோடி முஸ்லிம்களை இரண்டாக வெட்டியாயிற்று. இந்தியாவிலுள்ள நாலரை கோடி முஸ்லிம்களையும் வெட்டுவதா?

'முஸ்லிம்கள் முற்றிலும் வேறுபட்ட சமுதாயத்தினர்' என்று மிஸ்டர் ஜின்னா வாதித்தார். அதற்கு ஒத்துப்பாடியவர்கள் இன்று 'முஸ்லிம்களும் திராவிடர்கள்தான்' என்று வாய் கூசாமல் பேசுகின்றனர். முன்னுக்குப்பின் இவ்வளவு முரண்பட்டுப் பேசுபவர்களை நம்ப முடியுமா? திராவிடஸ்தான் அடைந்த பிறகு தனி சமுதாய அடிப்படையில் வாங்கிய உங்கள் பாகிஸ்தானுக்கு போங்களென்று சொல்லமாட்டார்களென்பது என்ன நிச்சயம்? 'மதமென்றால் மடமை, கடவுளென்றால் பித்தலாட்டம்' என்று பேசுபவர்களுடன் மதத்துக்காக எதையும் செய்யத் தயாராயிருப்பவர்கள் கூடி சமாதானமாய் வாழத்தான் முடியுமா?

நாட்டின் பெரும்பான்மை மக்களால் கௌரவிக்கப்படும் ராமாயணத்துக்கு பஹிரங்கமாய் நெருப்பு வைத்து பொசுக்குபவர்கள் திராவிடஸ்தானில் நூற்றுக்கு ஆறு பேராக இருக்கப்போகும் முஸ்லிம்களின் வேதத்தை கொளுத்தமாட்டார்களா? புத்தியுள்ள எந்த ஒரு தமிழ்நாட்டு முஸ்லிமும் இவர்களை ஆதரிக்க முடியாது.

ஹிந்தி ஒழிக! என்று கோஷிக்கின்றனர். பாஷை புனிதமானது. தெய்வீகத்தன்மை வாய்ந்தது. இஸ்லாமிய கண்ணோட்டத்தில் பாஷையை ஒழிக என்று சொல்லுவது பாபம். ஹிந்தி எதிர்ப்பு இயக்கத்திலும் முஸ்லிம்கள் பங்கெடுத்துக்கொள்வதற்கில்லை. அன்று ஆங்கிலத்தை பகிஷ்கரித்ததன் மூலம் முஸ்லிம்கள் பெரும் நஷ்டத்துக்காளாகியிருக்கின்றனர்: இன்று ஹிந்தியை பகிஷ்கரித்து மேலும் நஷ்டமடைவது புத்திசாலித்தனமான செய்கையல்ல. முஸ்லிம்கள் ஹிந்தி கற்பதில் மற்றவர்களைவிட முந்திக்கொள்ள வேண்டும்.

ஹிந்துக்களும், முஸ்லிம்களும் சேர்ந்து வாழ வேண்டுமென்று சொன்ன பாவத்துக்காக காங்கிரஸ் முஸ்லிம்களை பகிஷ்கரித்த லீகர்கள் இன்று 'மதமென்றால் மடமை' என்றும் 'கடவுளென்றால் பித்தலாட்டம்' என்றும் பேசுபவர்களின் கட்சியில் சேரும் ஒரு சில முஸ்லிம்களைக் குறித்து என்ன முடிவு செய்யப்போகின்றனர்?

கடந்த காலத்தவறுகளை உணர்ந்து நல்லதொரு எதிர்காலத்தை உருவாக்கும் நல்லறிவு ஆண்டவன் முஸ்லிம்களுக்கு அளிப்பாராக!

# பொதுநலத்தொண்டின் விளக்கம்.

## அதிராம்பட்டிணம்.

பர்மா ஹரிஜன சேவா சங்க காரியதரிசி கோ. லோகநாதன் அவர்கள் I. N. A. சேவாதள கமிட்டி (அதிராம்பட்டணம்)க்கு 25—9—48-ல் விஜயம் செய்தபோது காரியதரிசி M. E. கமால் கேட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்கப்பட்டபோது பிரஞ்சிந்தியாவில் வரப்போகும் தேர்தலைப்பற்றி முக்கியமாக கேட்டகேள்விக்கு பதில் கூறியதாவது:—

பிரஞ்சிந்திய நடவடிக்கைகளை நேரில் காண்பவன். ஒரு சில சுயநலக்கும்பல்களைச் சார்ந்தவர்கள். ஒரு கட்சியின் ஆதரவற்றவர்கள். பொதுமக்களின் சக்தியைப் பெருதவர்கள். கள்ள மார்க்கெட் அதிகாரிகள் (அபின் - கஞ்சா) அரசாங்கத்தின் கைப் பொம்மைகளாக இருந்துகொண்டு ஆணவ மிகுந்த - அக்கிரமமாக இட்டதே ·சட்டமாக பொதுமக்களை அச்சுறுத்தி பேச்சுரிமையை பறித்து குண்டர்களின் பலத்தை நம்பி பாமரர்களை ஏமாற்றி அறிஞர்களுக்கு ஆக்ரமிப்பு சட்டமிட்டு திராவிட கழகத்தினர்களுக்கு ஊக்கமும் - உற்சாகமும் அளித்து ஒன்றும் தெரியாத அப்பாவிகளாகிய பாமரர்களை ஏமாற்றி தேர்தலில் வெற்றி பெற்றுவிடலாம் என்ற இறுமாபபு மனப் பான்மைக்கொண்டு தேர்தலை நடத்த துணிந்து திட்டமிட்டிருக்கின்றனர். தேர்தல் நடத்த என்ன காரணமிருக்கிறது?

தேர்தல்முறை நடப்பது எனில் ஒழுங்கு, கட்டுப்பாடு, நீதி, நேர்மை வேண்டும். மக்களை பயமுறுத்தி பலவந்தமாக வாக்கெடுப்பு நடத்துவதும், பயந்து வாக்களிக்க - ஓட்டு செய்ய வராத நபர்களின் பெயர்களைக் கொண்டு குண்டர்களின் பொய்க் கையெழுத்துடன் வாக்கெடுப்பு நடத்துவதெனில் தமிழ் நாட்டின் தேசீய காங்கிரஸினரும் பொதுமக்களும் ஒப்புக் கொள்ளமுடியாதென்பதுதான் முக்கியமாக கவனிக்க - கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டிய காரியமாகும். மேலும் தேர்தல் காலத்தில் பொதுமக்கள் பீதியில்லாது ஓட்டு செய்ய நமது தொண்டர்கள் கண்காணிப்பு அவசியம் வேண்டும். இல்லையேல் தேர்தல் நடப்பதுவும் நடக்காதிருப்பதுவும் ஒன்றே. ஆனல்? பிரஞ்சிந்திய பொதுமக்களை அடக்கிவிடலாம் என்ற மனப்பான்மை கொண்ட ஒரு சில தனிப்பட்ட அரசாங்க கைபொம்மைகள் - நபர்கள் திராவிடக் கட்சியினருக்கு ஊக்கம் உற்சாகமளித்தும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மறைமுகமாக ஆதாவளித்தும் மக்களிடையே துஷ்பிரசாரம் செய்தும் வருகின்றனர். திராவிடக்கட்சியின் தலைவர் உத்திரவு எப்படியோ? ஒப்புக்கொள்ளமுடியாத - சகிக்கொணுத நீதி, நேர்மை, ஒழுங்கு கட்டுப்பாடற்ற முறைகளுக்கு தமிழன் இடம் கொடான். தமிழ் நாடும் இடம் தராது என்பது என் மன துணிபு" என்பதாக சுருக்கமாக கூறி முடித்தார்.

பொதுநலத்தொண்டு செய்வதற்காக முன்னணியில் வரும் எவராயினும் எந்தவொரு நிர்வாகத்தையோ, கட்சியையோ, பார்ட்டியையோ, கழக நிலையங்களையோ நிலை நாட்டப்புகுமுன் பொருளாதாரச் சிக்கல்|தாண்டவமாடுவது கண்கூடு. பொருளாதாரச் சிக்கல்களைச் சரிப்படுத்திக்கொண்டால்தான் மேற்கொண்ட காரியங்களை வெற்றிகாமாக நடத்தமுடியும். அப்பொழுததான் பொதுமக்கள் ஒத்துழைப்பின் பேரில் நிதி திரட்டவேண்டியது அவசியமாகும்; ஆவன செய்யலாம். ஆக்கவேலைகளில் ஈடுபட்டு உழைக்கலாம். அக்காலங்களில் பொதுநலத்தொண்டு என்னவென்பதையே தெரியாத ஒரு சிலர் அதிகப் பிரசங்கிகள்—வாய்வேதாந்திகள் எதிர்ப்புக் கொடுப்பார்கள். நிதி திரட்டுவதைப் பற்றி குறை கூறுவார்கள். நிர்வாகத்திறமையை உணராதவர்கள் அல்லவா! அப்பேர்ப்பட்ட ஆசாமிகள் எதிர்ப்புக்காக—வெறும் வாய் வீச்சிற்காக அஞ்சியோ—பயந்தோ இழுக்கு வரும் என்று எண்ணி பொதுநலத்தொண்டை பாழ்படுத்தி விடாது எதிர்ப்புக்கிடையே — அவதூறுக்கிடையே உழன்று சுழன்று "எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவமென்பதிழுக்கு" என்பதற்கிணங்க, மக்களுக்கு பயன் தரக்கூடிய தொண்டினை ஒரே நிலையில் நின்று மனம் தளராது செய்து வரவேண்டியதே லட்சியத்தின் கோட்பாடாகும்; முக்கியக் கடமையாகும். "என் கடன் பணி செய்து கிடப்பதே" வென்பதாகும்.

பர்மா ஹரிஜன சேவா சங்க பொதுக்காரியதரிசியும், ஆசிரியரும், I N. A. (B. S. P. T) இன்ஸ்ட்ரக்டருமாகிய கோ. லோகநாதன் அவர்கள் 34-9-48 I. N. A. சேவாதளக் கமிட்டியின் செயலை நேரே வந்து பார்வையிட்டபோது அறிவித்த செய்தியின் சுருக்கமாகும்.

இங்ஙனம்,
காரியதரிசி M. E. கமால்.


## ஆஸாத் வாசகர்களுக்கு

சந்தா துகை அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் தயவுசெய்து தங்கள் வருட சந்தா ரூபாய் 6/- மணியார்டர் மூலம் அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறேம்.
ஆஸாத் ஒரு லட்சியப் பத்திரிகை.
அதை ஆதரிப்பது உங்கள் தேசீயக்கடமை.

மானேஜர், ஆஸாத், குடந்தை.

# ஒரு சரித்திரம். (சென்ற இதழின் தொடர்ச்சி.)

1857-ல் பிரிட்டிஷாருக்கு எதிராகத் தோன்றிய கலகம் ஹிந்து முஸ்லிம்களின் கூட்டு முயற்சியேயாகும். பெயரளவில் டில்லிச் சக்ரவர்த்தியான பகதூர்ஷாவுக்கு ஆதரவாக இரு சாராரும் திரண்டு சூழ்ந்தனர் அக்கலகம் வெற்றியடைந்திருக்குமானால் அம்முயற்சி பகதூர்ஷாவின் சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தி அதைப் பலப்படுத்தியிருக்கும் அதனுடைய தோல்வியால் அவர் கைதியாகி நாடுகடத்தப்பட்டதும் இந்தியச் சக்கரவர்த்திகளான மொகலாயரின் வமிசம் அத்துடன் ஒழிக்கப்பட்டதும் எவ்வளவு தூரம் உண்மையோ அவ்வளவு நிச்சயமாக அதனுடைய வெற்றியால் அவரது சாம்ராஜ்யமும் நிலைத்திருக்கக்கூடும்.

1857-க்குப் பிந்திய ஆண்டுகளில் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் முஸ்லிம்கள் மிகக்கடுமையாக நடத்தப்பட்டார்கள். குறிப்பாக, உலமாக்கள் பிரிட்டிஷாருடைய ஆட்சிக்கு முழுமனதுடன் என்றுமே பணிந்ததுகிடையாது. ஆளும் வர்க்கமாக இருந்த நெடுங்காலச் சரித்திர அமைப்பைப் பெற்ற முஸல்மான்களுக்கு வெளியிலிருந்து வந்த பிரிட்டிஷாரின் தலையீடு வெறுப்பை உண்டாக்கியது. ஜூலியின் ஹக்ஸிலியின் வார்த்தைகள் மீண்டும் நினைப்பதற்குரியன. இத்தகைய 'வெளிநெருக்குதலே தேசீயத்தை உருவாக்குவதில் மிகப்பெரிய அம்சமாக இருக்கிறது' ஆகவே இவைகளெல்லாம் சேர்ந்து இந்திய சமுதாயத்தை உருப்படுத்தியதில் ஆச்சரியமொன்றுமில்லை ஹிந்துக்களும் முஸ்லிம்களும் முழு ஜனத்தொகையில் அதிகமான ஜனங்களால் பின்பற்றப்படுகிற இரண்டு வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், இவ்விரு பாலாரும் சேர்ந்து, ஒரே இந்திய தேசீய இனமாக அமைந்திருக்கிறார்கள். இதை ஹிந்துக்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அதுபோன்று முஸ்லிம் அறிஞர்களும் இதை அழுத்தமாகக் கூறியிருக்கிறார்கள். முஸல்மான்கள் காங்கிரஸில் ஏராளமாகச் சேருவதை சர் ஸையது அஹமதுகான் தடுத்தாரென்று நம்பப்படுகிறது. இவரும்கூட ஆதியில் இந்தியா ஒரு தேசீய சமுதாயத்தைக்கொண்டதென்ற நம்பிக்கையுடனிருந்தார். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒரு கன்னிப் பெண்ணின் இருகண்களென்றும் ஒன்றைத் துன்புறுத்தாமல் இன்னொன்றைத் துன்புறுத்த முடியாது என்றும் கருதினார். இந்திய தேசீய காங்கிரஸைச் சேர்ந்த முஸல்மான்களுடைய பேச்சுக்கள், எழுத்துக்களினின்றும் மேற்கோள் காட்டுவது அனுவசியமாகும்.

புகழ்வாய்ந்த வேறு இந்திய முஸல்மான்களுடைய பேச்சுக்களிலிருந்து மேற்கோள் எடுத்துக் காட்டி இந்த இருதேச விவகாரப் பேச்சை முடிக்கிறேன். முதன் முதலில் சர் ஸையது அஹமதுகானுடைய பேச்சுக்களிலிருந்து இரண்டு இடங்களை எடுத்துக்காட்டுகிறேன். பிறகு நம்மிடையே வாழ்ந்து வரும் பெயற்பெற்ற முஸ்லிம்கள் இருவருடைய பேச்சிலிருந்தும் மேற்கோள் காட்டுகிறேன். 1885-ல் குருதாஸ்பூரில் ஒரு கூட்டத்தில் சர் ஸையது பின்வருமாறு கூறினார்.

'பண்டைய நாட்டிலிருந்து தேசம் என்றசொல் ஒரு நாட்டில் வாழ்கிறவர்களுக்கேசொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் சில சிறப்பியல்புகளில் வேறுபட்டிருக்கலாம். ஹிந்து முஹமதியச் சகோதரர்களே! நீங்கள் ஹிந்துஸ்தானத்திலில்லாமல் வேறு நாட்டிலா வாழ்கிறீர்கள்? நீங்கள் ஒரேநாட்டில் வாழவில்லையா? நீங்கள் எரிக்கப்படுவதும் புதைக்கப்படுவதும் ஒரே மண்ணிலல்லவா? "ஹிந்து" 'மஹம்மதியன்' என்ற சொற்கள் மத வேற்றுமையை மாத்திரம் குறிப்பன என்பதை மனத்தில் வைத்துக்கொள்ளுங்கள், மற்றப்படி இந்த நாட்டில் வாழ்கிற ஹிந்து, மஹமதியன். அல்லது கிருஸ்தவன் முதலிய யாவரும் ஒரு தேசத்தைச் சேர்ந்தவர்களே. அப்படியானால். இந்தப் பலவேறு வகுப்புக்களை ஒரு தேச சமுதாயமென்றுதான் கூறவேண்டும். இந்நாடு நமக்கெல்லோருக்கும் பொது உடைமை ஆகையால் இதன் நன்மைக்கு நாம் யாவரும் ஒத்துழைக்க வேண்டும்.'

மற்றொரு சந்தர்ப்பத்தில் லாகூரில் இதே விஷயத்தை எடுத்துச் சொன்னார்.

'தேசம் என்று சொல்லும்போது ஹிந்துக்களையும் மஹம்மதியர்களையும் சேர்த்தே சொல்லுகிறேன். ஏனென்றால் அச்சொல்லுக்கு நாம் கொடுக்கும் பொருள் அது தான் நான் அவர்களுடைய மத நம்பிக்கை என்ன என்று பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை அச்சொல்லில் மதத்தொடர்பு ஏதும்காண்கிறோமோ? இல்லை. நாம் ஒரேநாட்டில் வாழ்கிறோம்; ஒரே அரசாங்கத்துக்கு அடிமைப்பட்டிருக்கிறோம். நன்மை பெருகினால் எல்லோர்க்கும் ஒன்றுபோல் நன்மை பெருகுகிறது. பஞ்சக் கொடுமை வந்தால் எல்லோரும் ஒன்றுபோல் பஞ்சத்துக்கு ஆளாகிறோம். இந்த எல்லாவித காரணங்களாலும் இந்தியாவிலுள்ள எல்லா இனத்தாரையும் ஒரேபெயரால் அதாவது ஹிந்து என்று அழைக்கிறேன். ஹிந்து என்றால் ஹிந்துஸ்தானத்தில் இருப்பவன் என்று அர்த்தம்.

சட்டசபையில் இருக்கும்பொழுது இந்த தேசத்தின் செழிப்பின்மீதே கண்ணுங் கருத்துமாக யிருந்தேன்.

ஸ்ரீஜத் அதுலானந்த சக்கரவர்த்தியின் இந்திய ஹிந்துக்களும்-முஸ்லிம்களும்என்றபுத்தகத்திற்கு முகவுரை எழுதிய ஸர் ஷாபத் அஹமதுதான் பெரிய சரித்திர ஆசிரியர். பல்லாண்டுகளாக இந்தியாவில் ஏற்பட்ட சமூகக் கலாசார அபிவிருத்தியைச் சுருக்கமாகக் கூறிவிட்டு பின் கண்ட முடிவுகளைத் தெரிவிக்கிறார்.

'தேசீய காரியங்களின் ஒவ்வொரு துறையிலும் இரு வகுப்பாரிடையே மிகுந்த ஒத்துழைப்பும் நெருங்கிய உறவும் இருந்தன. பொதுவாக நாம் நம்புவதைக் காட்டிலும் அதிகமாகவே இவை அமைந்திருந்தன. இந்த இரு வகுப்பாரிடையேயும், இவ்விரு வகுப்பைச்சேர்ந்த பல பிரிவினரிடையேயும் பரஸ்பர உணர்ச்சியும் ஒருமித்த கருத்தும் இருந்து வந்ததை இந்தியக்கலாசாரம் கூறுகிறது ஆசியாவில் வேறு எந்த நாட்டிலும் உள்ளதற்கதிகமாக இந்தியாவில் தேசீய உணர்ச்சி பூரணமாக அமைந்திருப்பதை இந்திய மொழிகளிலுள்ள காவியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. மேல் வகுப்பார், பொது மக்கள், இவர்களுடைய விருப்பங்களையும் சுபாவங்களையும் தூயதாக்கிய இந்தத் தேசீயஉணர்ச்சி தேசம் முழுதும் பரவிப் பண்படுத்தியிருக்கிறது. நம்மிடையே அரசியல் வித்தியாசங்கள் இருக்கலாம். அதை நான் ஒன்றும் அசட்டை செய்யவில்லை. இருப்பினும் வாழ்க்கை வளமைகளிலும், பழக்கங்களிலும் எண்ணச் சுழலிலும் பலமான ஒற்றுமைவழி வழியாக வந்துள்ளது. சுமார் ஆயிரம் வருஷங்களாகப் பல நிலைமைகளிலும், தீயிலும் குளிரிலும் உருவாக்கப்பட்டது இவ்வொற்றுமை. இது அழிக்க முடியாதது, நித்தியமானது. இப்பொழுது நமக்குத் தேவையென்ன? ஸர்ஷாபத் மேலும் கூறுகிறார்: 'சமூக உண்மையை அரசியல் உண்மையாகக் கருதுவதும், தேசீய அமைப்பில் காணும் நோய்களை அரசியல் சீர்குலைவு எனக்கருதுவதுமான குறுகிய எண்ணத்தை, ஹிந்து முஸ்லிம் கலாசாரத்தை வேரூன்றிப் படிப்பதன் மூலம் திருத்திக் கொள்ள வேண்டும். சிறப்புற்றோங்கிய முன்னாளில் இந்திய எண்ணங்களையும் ஆர்வங்களையும் அமைத்த சக்திகளை நன்கு உணர வேண்டும்.'

ஸர் சுல்தான் அஹமதும் தன் அபிப்பிராயத்தை அழுத்தமாகவே கூறியிருக்கிறார்: 'ஹிந்து முஸ்லிம்களிடையே தோழமை சரித்திர சம்பந்தமானது. மொகலாயர்காலம் தொடங்கி நூற்றாண்டுகளாக இருந்து வந்திருக்கிறது. இப்போதைய வகுப்பு வேற்றுமைகள் நெடுங்காலத்திய தோழமையைக் கெடுக்கப்பார்க்கின்றன. இந்துஸ்தானத்தில் ஒற்றுமையைக் குலைப்பவர்கள், இந்நாட்டில் முஸ்லிம் ஆட்சியால் ஏற்பட்ட ஓர் ஆக்க வேலையைச் சீரழிப்பதாகும் என்பதை உணருகிறார்களில்லை. இன்றைய இந்தியர்கள் அவர்களது முன்னோரைக் காட்டிலும் மிகுந்த அறிவு பெற்றிருக்கிறார்கள் ஆனால் ஆரியப் போக்கிலும், மஹம்மதிய சாரசன் போக்கிலும் ஒற்றுமைக்கு என்ன பொருள் என்பதை இவர்கள் மனதில் பிரித்தறிய ஆரம்பித்து விட்டால் அப்புறம் இவர்களுடைய உயர்ந்த கருத்துக்களெல்லாம் மங்கி மறைந்துவிடுகின்றன. நெடுங்காலத்திற்கு முன்பே இந்தத் தலைவர்களும் அறிஞர்களும் இரு மதங்களிடையே ஒற்றுமையை நிறுவ முயன்றனர். இளவரசர் தாரா ஷெக்கா இவைகளை ஒன்றுசேரும் இரு நதிகள், மஜ்மா-உல்-பாஹ்ரீன் எனக்கூறினர். கபீரும் நானக்கும் இவைகளை ஒன்றுபடுத்த முயன்றார்கள். தங்களுடைய தோத்திரப்பாக்களில் "கருணை வள்ளலாம் அல்லா, ராமன்" என இருவரின் நாமங்களையும் சேர்த்துக்கொண்டனர். ஹிந்து, முஸ்லிம் கலைஞர்கள் பொதுக்கலைகளையும், தொழில்களையும் உண்டு பண்ண முனைந்தார்கள். இக்கலைகள் ஹிந்து முஸ்லிம் இருசாராருடைய இதயத்தையும் ஒருங்கே கவர்ந்தன இத்தொழில்கள் இவ்விரு வகுப்பாருக்கும் உபயோகமாயின. எது மகிழ்ச்சி? எது அழகு? என்பதுபற்றி இவர்களிடையே ஒரே விதக் கருத்துக்கள் தோன்றலாயின. சரித்திரத்தின் வாயிலாகத் தனக்கென்று கட்டப்பட்டதேசவரலாறு என்ற மாளிகையை இன்றைய இந்தியன் இடிக்கப் புறப்பட்டிருக்கிறான். சரித்திரத்தை மதிக்கத் தெரியாத இவன் அதற்குக் கெட்ட பெயரைச் சூட்டுகிறான்.

'ஹிந்து முஸ்லிம்களுக்கிடையே எத்தனையோ பொது அம்சங்களிருப்பினும் அவர்களுக்கிடையே காணப்படும் ஒற்றுமை சிதறுவதானது ஆச்சர்யமாகவே இருக்கிறது. இப்பொது அம்சங்களை வைத்துக்கொண்டு ஒற்றுமையின் அடிப்படையை விரிவாகச் செய்வது நமது கடமையாக இருக்க வேண்டும். பொதுக்கலாசாரச் சொத்தான இசை, இலக்கியம் ஓவியம், சிற்பம், இவைகள் மாத்திரம் நம் முந்தையர் நமக்களித்து விட்டுச் சென்ற அருநிதியங்கள் அல்ல ஹிந்துக்களும், முஸ்லிம்களும் எத்தனையோ சண்டைகளில் தோளோடு தோள் நின்று போர் புரிந்ததனால் ஒரு பொது அரசியல் விதியும் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. சமூக வாழ்விலோ இவர்களுடைய தொன்று தொட்ட மரபுகளும் பழக்கங்களும் ஒன்றுக்கொன்று பின்னிக் கிடக்கின்றன. பாபர் காலத்தை போன்ற அந்தக்காலத்திலேயே இரு சாராருக்கும் பொதுவான வாழ்க்கை முறைகள் தெள்ளத் தெளிவாக அமைந்து கிடந்தன. பாபர் சக்கரவர்த்தி தமாஷாக இவை

# இந்திய முஸல்மான்களும் – ஐக்கிய சமுதாயமும்.

## இமாமும் ஹிந்த் மௌலானா அபுல்கலாம் ஆஸாத் அரிய விளக்கம்.

(1943-ம் வருஷம் ராம்கார் காங்கிரஸ் தலைமை உரையில்)

நான் ஒரு முஸ்லிம். முஸ்லிமென்று உணரும்போது பெருமை அடைகிறேன். பதிமூன்று நூற்றாண்டுகளின் பெருமைபடத்தக்க இஸ்லாமிய சரித்திரம் எனக்கு பிதுர்ராஜ்ஜிதமாய் கிடைத்திருக்கிறது. அதிலிருந்து இம்மியளவும் இழக்க நான் தயாரில்லை. இஸ்லாமிய போதனை, கல்வி, சரித்திரம், கலாசாரம், நாகரீகமே என்னுடைய செல்வக் களஞ்சியமாகும் முஸ்லிம் என்ற முறையில் மத. கலாசாரத்தைப் பொருத்தவரை குறிப்பிடத்தக்கதொரு நிலை எனக்கு உண்டு. அதில் யாரும் தலையிடுவதை என்னால் சகிக்க முடியாது.

ஆயினும் இத்யாதி உணர்ச்சிகளுடன் இன்னொரு உணர்ச்சியும் நான் கொண்டிருக்கிறேன் என்னுடைய வாழ்க்கையின் பிரத்யக்ஷ உண்மையினால் அது ஏற்பட்டிருக்கிறது. இஸ்லாம் அதை தடுக்கவுமில்லை. அவ்வழியில் இஸ்லாம் எனக்கு வழிகாட்டவே செய்கின்றது.

நான் ஒரு இந்தியனென்று நினைக்கும்பொழுது பெருமைப்படுகிறேன். பிரிக்கமுடியாத இந்திய சமுதாய அமைப்பின் ஒரு அங்கமாகவே நான் இருக்கின்றேன். முக்யத்வம் வாய்ந்த அங்கமாகிய நான் இல்லாமல் சமுதாயப் பெருமையின் கட்டடம் அரைகுறையாகவே இருந்துவிடும். அதை உருவாக்குவதில் புறக்கணித்து விடமுடியாததொரு உருப்பு என்ற உரிமையை எவ்விதத்திலும் நான் விட்டு விட முடியாது.

மனித வர்க்கத்தின் பல்வேறு ஜாதியினர் பலதரப்பட்ட நாகரீகத்தினர் வெவ்வேறு மதத்தினர் அடங்கிய கோஷ்டிகளின் வாசஸ்தலமாக இந்தியா விளங்க வேண்டுமென இயற்கையே முடிவுசெய்திருந்தது. சரித்திரமே உதயமாகாமல் இருந்த அக்காலத்திலேயே அந்தக் கோஷ்டிகளின் வருகையும் ஆரம்பமாயிற்று ஒன்றன்பின் ஒன்றாக தொடர்ந்து வந்துகொண்டிருந்தன. எல்லோரையும் வரவேற்று, பறந்த இந்தியா, தன்னுடைய ஆதரவுகவிந்தமடியில் தங்குவதற்கு இடமும் கொடுத்தது. அவ்வாறு வந்த கோஷ்டிகளிலெல்லாம் கடைசியாக முஸ்லிம்களின் கோஷ்டியும் வந்துசேர்ந்தது. அதற்குமுன் வந்தவர்களின் வழியை பின்பற்றியே வந்துசேர்ந்த முஸ்லிம்கள் நிரந்தரமாய் இங்கு தங்கலாயினர். அதிலிருந்து இந்தியா உலகத்தின் இரண்டு வேறுபட்ட ஜதியினர் நாகரீகத்தினரின் உறைவிடமாக விளங்கிற்று. ஆரம்பத்தில் கங்கை, யமுனையைப்போல் தனித்தனியாகவே இவ்விரு ஜாதியினரும் பிரிந்து போய்க்கொண்டிருந்

---

களை "ஹிந்துஸ்தானி முறைகள்" எனக் கூறினார். ஹிந்துஸ்தானி வழக்கங்களில் ஹிந்து முஸ்லிம் இருசாராருடைய நன்மைகளும் கலந்திருந்தன பிறகு உருது தோன்றியது. ராணுவத்திலிருந்து அது தொடங்கியது. எல்லாவற்றிலும் மேலாகப் போற்றப்பட்ட மதத்திலும கூட ஒன்றையொன்று பாதித்தன. முஸ்லிம் ஹிந்து மதத்தைப் புதிய போக்கில் திருப்பினான் அதற்குப் புதிய சாயம் கொடுத்தான். அவனுடைய மதமும் இந்தியச்சாயலை அடைந்தது. இமயமலைக்கப்பாலுள்ள முஸ்லிம்கள் இதைத் தெற்றெனக் கண்டார்கள்

'இந்தியாவிலுள்ள முஸ்லிம் இந்திய மகனாகிவிட்டான். டில்லி சுல்தானத்தையும், கஜினி சாம்ராஜ்யத்தையும் குத்புதின் பிரித்த பொழுதே இந்தப் பாதை மாற்ற முடியாதபடி வகுக்கப்பட்டு விட்டது. ஒரு முஸ்லிம் அரசன தன்குடிகளில் எந்தப்பகுதியினரையும் வித்தியாசமாகப் பாராட்டக்கூடாது என்பது ஒரு கட்டளை. அது தெளிவாக வரையறுக்கப்பட்ட சட்டம். "எல்லா மதத்தினரையும் ஆதரவோடு கவனிக்கவேண்டும் சில பகுதியினரைத் தன் பிள்ளையாகவும் சிலரைச்சக்களத்தியின் பிள்ளையாகவும் நடத்தக்கூடாது" என்று ஆணையிடப்பட்டிருக்கிறது. பாபருடைய வாழ்க்கைக்குறிப்புக்களோடு அபுல்பாஸலுடைய **அயினி-அக்பாரியை** ஒப்பிடும்போது இந்தியாவைத் தாய்நாடாகக் கருதுவதும் அதன் மீது அன்பு செலுத்துவதும் எவ்வாறு தோன்றி வளர்ந்தன என்பதைக் கவனிக்க மகிழ்ச்சியுறுகிறது சாம்ராஜ்யத்தைத் தோற்றியவர் "இந்துஸ்தானத்தைப் போற்றும்படியாக அதில் இன்பங்கள் ஒன்றும் இல்லை" என்று குறைகூறுகிறார். அக்பர் பட்டத்திற்கு வருவதற்குள்ளாக இந்த அபிப்பிராயம் மலையேறிவிட்டது. அக்பரது சரித்திர ஆசிரியன் "இந்துஸ்தானத்தின் அழகுகளில் பரவசமடைகிறான். "தன்னுடைய சொந்த நாட்டின் மீதுள்ள பாசத்தால்" அவன் மனப்போக்கு மாறியதற்காக மன்னிப்புக் கோருகிறான்.

—இந்தியா பிரிக்கப்பட்டால்.........

பாபூ ராஜேந்திரபிரஸாத்

தனர். ஆனால் மாற்ற முடியாத இயற்கை விதியை ஒட்டி காலப்போக்கில் இருவரும் ஒரு சங்கமத்தில் போய் கலக்கவேண்டியதாயிற்று. இவ்விருவரின் கலப்பு இந்திய சரித்திரத்தில் மகத்தான அத்தியாயமாகும். இந்த கட்டத்திற்கு பிறகு இயற்கையின் மர்மச்கரங்கள் பழய இந்தியாவுக்கு பதில் புதிய இந்தியா ஒன்றை நிர்மாணிக்கும் வேலையை தொடங்கிவிட்டன.

நம்முடன் செல்வங்களை நாமும் கொண்டுவந்திருந்தோம். இந்த நாடும் தன்னுடைய செல்வங்களுடன் திகழ்ந்து கொண்டிருந்தது. நாம் கொண்டு வந்திருந்ததை அதற்கு கொடுத்தோம். அதுவும் தன்னுடைய பொக்கிஷக்கதவுகளை நமக்காக திறந்துவிட்டது இஸ்லாமிய களஞ்சியத்திலே மதிப்புவாய்ந்த "சகோதரத்வம், ஜனநாயகம்" நாம் கொடுத்தோம்.

சரித்திரத்தின் பதினோறு நூற்றாண்டுகள் இவ்விதம் கழிந்திருக்கின்றன. இன்று ஹிந்து தர்மத்துக்கு இந்த நாட்டில் உள்ள அதே உரிமை இஸ்லாமுக்கும் உண்டு. ஹிந்து தர்மம் பல ஆயிரம் வருஷங்களாக இத்தேசத்து மக்களின் தர்மமாக இருந்து வந்திருப்பினும் இன்று இந்தியர்கள் என்று பெருமையுடன் சொல்லிக்கொள்வதுடன் ஹிந்துக்கள் ஹிந்து தர்மத்தை அனுஷ்டிப்பதை போலவே நாமும் இந்தியர்கள் என்று பெருமையுடன் சொல்லிக்கொள்வதுடன் இஸ்லாமிய தர்மத்தை அனுஷ்டிப்பதும் சாத்தியமே. இன்னும் விரிவான முறையில் கிருஸ்தவர்களின் உரிமையையும் நான் ஒப்புக்கொள்கிறேன். இன்று கிருஸ்தவர்கள் தலை நிமிர்ந்து இந்தியர்களென்றும் இந்தியர்களின் மதங்களில் ஒன்றான கிருஸ்துவ மதத்தை அனுஷ்டிப்பவர்கள் என்றும் சொல்லிக்கொள்ளும் உரிமை அவர்களுக்கும் உண்டு.

பதினோரு நூற்றாண்டுகளின் கூட்டு சரித்திரம் இன்று நம் இந்திய வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் பிரதிபலித்துக்கொண்டிருக்கிறது. நம்முடைய பாஷைகள் நாகரீகங்கள், இலக்கியங்கள், கவிதைகள், நோக்கங்கள், உடைகள், பழக்க வழக்கங்கள், முதலிய தினசரி வாழ்க்கையின் எந்த ஒரு அம்சமும் கூட இந்தக் கூட்டுவாழ்க்கை முத்திரை குத்தப்படாமல் இருக்கவில்லை. நம் பாஷைகள் வேவ்வேறாக இருந்தன. ஒரே பாஷையை பேச ஆரம்பித்தோம். நம்முடைய பழக்க வழக்கங்கள் மாறுபட்டிருந்தன. அவைகள் ஒன்று சேர்ந்து புதிய அச்சில் வார்க்கப்பட்டுவிட்டன. நம்முடைய பழய உடை சரித்திரத்தின் பழையசித்திரங்களில் பார்க்கமுடிகின்றதேஒழிய நம் திரேகங்களின் மீது காணக் கிடைக்கவில்லை. கூட்டுவாழ்கையின் இந்த ஆஸ்தி நம்முடைய ஐக்கிய சமுதாயத்தின் பெரும் பொக்கிஷமாகும் அதை இழந்துவிட்டு நம் கூட்டுவாழ்க்கை ஆரம்பமாவதற்கு முன்பிருந்த அந்தக் காலத்திற்குத் திரும்ப நாம் விரும்பவும் இல்லை. ஆயிரம் வருஷங்களுக்கு முன்னிருந்த ஹிந்து நாகரீகத்தை இன்று திரும்பவும் கொண்டுவர யாராவது ஹிந்துக்கள் நினைத்தால் அது கனவாக முடியுமேயொழிய நடக்கப் போவதில்லை. அவ்விதமே ஆயிரம் வருஷங்களுக்கு முன் ஈரான் மத்திய ஆசியாவிலிருந்து முஸ்லிம்கள் கொண்டுவந்த பழையநாகரீகத்தையும் வாழ்க்கையையும் இன்று மீண்டும் உயிர்ப்பிக்க எண்ணினால் இவ்வித எண்ணத்தை எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாக விடமுடியுமோ விடுவது நன்மை பயக்கும். என்று முஸ்லிம்களுக்கும் யோசனை கூறுவேன். அது ஒரு மனோராஜ்யம், பிரத்தியக்ஷ உண்மை நிலத்தில் இம்மாதிரியான எண்ணங்கள் முளைக்க முடியாது. மதத்தில் சீர்திருத்தத்திற்கு இடமுண்டு என்ற நம்பிக்கை உள்ளவர்களில் நானும் ஒருவன் அதை மறுப்பது முன் போக்கையே மறுப்பதாகும்.

நம்முடைய ஆயிரம்வருஷத்திய கூட்டுவாழ்க்கை ஐக்கிய சமுதாயத்தின் புதிய அச்சு ஒன்றை தயாரித்திருக்கிறது. இம்மாதிரியான அச்சுகள் மனிதர்களால் தயாரிக்கப்படுவதில்லை. பல நூற்றாண்டுகளில் இயற்கையின் கைகளால் தானாகவே தயாரிக்கப்படுகின்றன. இந்திய சமுதாய அச்சு வார்த்தாய்விட்டது. விதியின் முத்திரையும் அதன்மீது குத்தப்பட்டு ஆயிற்று நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பிரிக்கமுடியாத சமுதாயமாக உருவாகி விட்டோம். பிரிப்பதற்கான எந்த செயற்கை எண்ணங்களும் ஒன்றாக இருக்கும் நம்மை இரண்டாக பிரிக்கமுடியாது. இயற்கையின் தீர்ப்பை ஏற்று நம் விதியை நிர்ணயிக்கும் வேலையில் முனையவேண்டும்.

இன்று நம் வெற்றி மூன்று விஷயங்களைப் பொருத்தே இருக்கிறது. ஒற்றுமை, கட்டுப்பாடு, மகாத்மா காந்தியிடம் நம்பிக்கை, அவர் காட்டிய வழி நம் கடந்த காலத்திற்குப் பெருமை அளித்திருக்கிறது. அதைப் பின்பற்றுவதன் மூலம் மஹத்தான எதிர்காலத்தை நாம் உருவாக்க முடியும் நெருக்கடியான சோதனைகாலம் நம்மை எதிர்நோக்கி யுள்ளது. ஆவலுடன் உலகம் நம்மை நோக்கும் சந்தர்ப்பத்தை நாம் உலகத்துக்கு அளித்திருக்கிறோம். அதற்குத் தகுதியுள்ளவர்களாக நாம் விளங்குவோமாக.


## ஆஸாத் சந்தாதாரர்களுக்கு

வருட சந்தா ரூ. 6/— அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் மணியார்டர்மூலம் அனுப்பி ஆதரிக்க வேண்டுகிறோம்.

— மானேஜர், ஆஸாத், குடந்தை. —

நமது ஏஜண்டுகள்:—

ஸிலோன் முழுவதற்கும்
'ஆஸாத்' ஏஜெண்ட்

மெஸ்ஸர்ஸ்

**எம்மல் & கோ.,**

ஜெனரல் மர்ச்செண்ட்ஸ் & கமிஷன் ஏஜெண்ட்ஸ்

**காம்போலா,**

**ஸிலோன்.**

**WHOLE CEYLON AGENCY**

FOR

**"AZAD"**

**EMMEL & Co.,**

General Merchants & Commission Agents.

**GAMPOLA,** (CEYLON)

P. S முகம்மது மைதீன் சாகிப்,
ஷம்ஸுல்ஹுதா முஸ்லிம் சங்கம்,
அல்லிமுப்பன் தெரு, கடையநல்லூர்

*M. S. M.* கனி,
மரம், ஓடு வியாபாரம்,
கோபிசெட்டிப்பாளையம்.

ரா கணபதி,
C/o M S. முனிசாமி,
ஈஸ்வரய்யர் சந்து,
மெயின் ரோடு, திண்டுக்கல்.

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் எமது
"ஆஸாத்" விற்பனை செய்ய

**ஏஜெண்டுகள் தேவை.**

E. V. K. மீரான் சாஹிப்,
சத்திர தெரு, கல்லிடைக்குறிச்சி

முகம்மது சாலீஹ் சாஹிப்,
சாலீஹ் & ஸன்ஸ்,
எடத் தெரு, நாகபட்டிணம்.

P. K. E. அப்துல்லா,
லத்தீப் பில்டிங்ஸ்,
ஆஸாத் தெரு, வலங்கைமான்.

**பீ. மீரா மொய்தீன் சாகிப்,**
ரெங்கோன் ஹால், காரைக்குடி

S. S. முகம்மது இப்ரூஹிம் மரைக்காயர்,
" ஆஸாத் ஸ்டோர் "
கடைத்தெரு, அதிராம்பட்டணம்.

*G.* அப்துல் லத்தீப்,
மணியக்காரத்தெரு, திருச்சி.

**'ஆஸாத்'**

பணத்தை வைத்துக்கொண்டு கொடுக்காமலிருக்கும் ஏஜண்டுகளின் பெயர்கள் பணம் கொடுக்கும் வரை வாரந்தோறும் இங்கு வெளியிடப்படும்.

ஏஜண்டு பெயர்:
**அப்துல் சலாம்,** ஈரோடு.

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.